Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 10 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 23 (27.10.2005) வியாழக்கிழமை இதழ்:27

# புலிகளுடனான சந்திப்பே இடைநிறுத்தம்

# பயணத்துக்கு எந்தத் தடையும் இல்லை!



## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தெரிவிப்பு

லண்டன்—

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஐரோப்பாவுக்குள் வருவதற்கு எந்தவிதமான தடையையும் ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கவில்லை என்றும் - சிங்கள அரச ஊடகங்களே போலியான பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டதாகவும் விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமார் தெரிவித்தார்.

பிரான்ஸில் இருந்து இயங்கும் ரி.ரி.என் தொலைக் காட்சிக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி பெல்ஜியத்தில் நடைபெற்ற 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் மனுவைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தமிழ் தேசிய எழுச்சி மாநாடு வவுனியா நகர் எழுச்சிக்கோலம்!

வவுனியா—

வவுனியாவில் கடந்த ஜுலை மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் 8 ஆவது தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு இன்று மாலை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 3 மணிக்கு நகர சபை மைதானத்தில் அணிதிரளும் தமிழ்மக்கள் - தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காகப் பொங்கி எழுந்து குரல்கொடுக்கவுள்ளனர்.

வடக்கு - கிழக்கின் தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து படையினர் வெளியேறவேண்டும், ஐரோப்பிய யூனியன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை வரவேற்பதில்லை எனும் தமது முடிவை விலக்கவேண்டும்,

தமிழரின் இறைமை, தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை என்பவற்றை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் உட்பட தமது பல்வேறு உணர்வுகளை மக்கள் இன்றைய எழுச்சி நிகழ்வில் கலந்துகொணடு வெளிப்படுத்த உள்ளனர்.

இன்றைய இந்த எழுச்சி நிகழ்வையொட்டி வவுனியா பிரதேசம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

குறிப்பாக தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு நடை பெறும் வவுனியா நகர சபை மைதானம் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டுள்ளது.

இந்த எழுச்சி நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் இந்த நிகழ்வின் ஏற்பாட்டார்கள் தெரிவித்தனர். (03)

## புலிகளின் விமானப்படைக்கு எரிபொருள் இறக்குமதியா?

### கொழும்பு வர்த்தகரிடம் விசாரணை

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் விமானப் படைக்கென விமான எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பாக கொழும்பு வர்த்தகர் ஒருவரிடம் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுவருவதாக, கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் விமானப் படைக்கென விமான எரிபொருளை இறக்குமதி செய்ததாக புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதையடுத்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், எதிர்வரும் நாட்களில் இந்த வர்த்தகர் கைதுசெய்யப்படக்கூடும் என்றும் பொலிஸார் தெரிவித்தாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதன்மூலம் விடுதலைப் புலிகளிடம் இரண்டு இலகுரக விமானங்களைக்கொண்ட விமானப்படை இருப்பது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாமனாரின் கத்திக்குத்தில் காயமுற்ற மருமகன் பலி!

### ஊர்காவற்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம்—

ஊர்காவற்துறை பகுதியில் மாமனாரின் கத்திக்குத்துக்கு இலக்காகி படு

## இராணுவத் தளபதிக்கு சேவை நீடிப்பு; சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் விசனம்!

கொழும்பு—

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டே

இராணுவ மேஜர்களின் ஒய்வு வயதை 58 ஆகவும் லெப்.கேணல் பதவியில் உள்ளோரின் ஒய்வு வயதை 60

## ஞானக்கோனை 3 மாதங்கள் தடுத்துவைப்பதற்கு அனுமதி!

கொழும்பு—

லக்ஷ்மன் கதிர்காமர் கொலையுடன் சம்பந்தப்பட்டவரென்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழ் வர்த்தகர் சாள்ஸ் ஞானக்கோனை

ஊர்காவற்துறை பகுதியில் மாமனாரின் கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த மருமகன், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது ஊர்காவற்துறையைச் சேர்ந்த பரமசாமி கனகலிங்கம் (வயது 39) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த 24 ஆம் திகதி மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராற்றின்போது - மாமனார் கூரிய ஆயுதத்தால் மருமகனைத் தாக்கினார். இதனால் படுகாயமடைந்த மரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு —

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்கு ஜனாதிபதி சந்திரிகா இரண்டு வருட சேவை நீடிப்பு வழங்கியிருப்பது குறித்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே ஓய்வு பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், சிரேஷ்ட படையதிகாரிகள் மத்தியில் கடும் விசனம் எழுந்திருப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 05 ஆம் திகதியுடன் ஓய்வுபெற வேண்டிய இராணுவத் தளபதிக்கு 2007 ஜூன் 31 ஆம் திகதிவரை ஜனாதிபதி சந்திரிகா சேவை நீடிப்பு வழங்கியிருந்தார்.

மேலும் இராணுவ மேஜர்களின் ஓய்வு வயதை 55 இலிருந்து 58 ஆக உயர்த்தவும் சந்திரிகா குமாரதுங்க ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான சட்டத்திருந்தம் நிறைவேற்றப்படும் வரை இந்த ஓய்வு வயது உயர்த்துதல் நடைமுறைக்கு வராது என்று இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இராணுவ மேஜர்களின் ஓய்வு வயதை 58 ஆகவும் லெப்.கேணல் பதவியில் உள்ளோரின் ஓய்வு வயதை 60 ஆகவும் உயர்த்த பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன பரிந்துரை செய்திருந்தார்.

ஆனால், இராணுவத் தளபதிக்கு மட்டுமே ஜனாதிபதி சந்திரிகா நீடிப்பு வழங்கியுள்ளார். இதனால், அடுத்த இராணுவத் தளபதியாகும் வாய்ப்புக்கிட்டும் என எதிர்பார்க்கப்பட்ட மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உள்ளிட்ட சிரேஷ்ட மேஜர் ஜெனரல்தர அதிகாரிகள் கடும் விசனமடைந்துள்ளனர்.

தொடர்ந்தும் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் பதவிவகிக்க முடியாதென்பதால் இவர்கள் உயர் பதவிகளுக்குச் செல்ல முடியாமல் ஓய்வுபெற வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அத்துடன், மேஜர்தர அதிகாரிகளின் ஓய்வு பெறும் வயது 58 ஆக அதிகரிக்கப்பட்டிருப்பதால் பெருமளவான இளநிலை அதிகாரிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இராணுவ அதிகாரிகள் மத்தியில் விசனம் ஏற்பட்டுள்ளது.

தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழ் வர்த்தகர் சாள்ஸ் ஞானக்கோனை மூன்று மாதங்கள் தடுத்துவைக்க அனுமதி பெற்றிருப்பதாக, கொழும்பு குற்றப்புலனாய்வுத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பிரதான நீதிபதி சரோஜினி குசலவீரவர்த்தனவிடம் நேற்று முன்தினம் இது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்தனர்.

இந்தக் காலக்கெடு முடிவடைவதற்கு முன்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் குற்றப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்தனர்.

விசாரணை தொடர்பாக மேலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் இயக்க உறுப்பினர் கோபிக்கு பிணை அனுமதி!

கொழும்பு —

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன கொல்லப்பட்ட வழக்கில் - சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரான கோபி எனப்படும் வீரபாண்டியன் நேற்று பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

கோபிமீது வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபருக்கு போதுமான சாட்சியங்கள் இல்லை என்று இரகசிய பொலிஸார் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.

இதையடுத்து இவரை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி இணுவில் பகுதியில் சார்ள்ஸ் விஜேவர்த்தன கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் யாழில் கோபி கைதுசெய்யப்பட்டார்.

அடையாள அணிவகுப்புக்கு உத்தரவிடப்பட்ட போதும் இவர் அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகளுடன் இணைந்து ரணில் நாட்டை துண்டாடுவதற்கு முயற்சி!

## திருமலையில் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு —

விடுதலைப் புலிகளுடன் இணைந்து ரணில் விக்கிரமசிங்க நாட்டை துண்டாட முனைவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திருகோணமலையில் நேற்று நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மகிந்த ராஜபக்ஷ வருவதை முன்னிட்டு திருகோணமலை நகரத்தில் நேற்று கடும் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. மக்கெய்சர் விளையாட்டரங்கிற்குச் செல்லும் பாதைகள் பொதுமக்களின் போக்குவரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கடலில் கடற்படையின் பீரங்கிப் படகுகளும் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தன. உயரமான கட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பாரிய மரக்கிளை முறிந்து விழுந்து அரியாலையில் கடைகள் நாசம்!

## நான்கு லட்சம் ரூபா நஷ்டம்

யாழ்ப்பாணம்

அரியாலை - தபாற்கடைச் சந்தியிலுள்ள சந்தைப் பகுதியில் அமைந்திருந்த பல வருடங்கள் பழமை வாய்ந்த பாரிய ஆலமரத்தின் கிளை ஒன்று அருகில் உள்ள கடைத் தொகுதியின் மீது விழுந்ததால் அங்கிருந்த மூன்று கடைகள் பாரிய சேதத்திற்கு உள்ளாகின.

கடந்த சனிக்கிழமை இரவு பெய்த காற்றுடன் கூடிய கடும் மழை காரணமாக இந்த மரக்கிளை முறிந்து விழுந்ததால் - கடைகளின் கூரைகள், தளபாடங்கள், தளவுகள் மற்றும் விற்பனைப் பொருட்கள் சேதமடைந்துள்ளன.

இதனால் சுமார் 4 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான இழப்புஏற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த மரக்கிளையால் ஏற்பட்ட போகும் அபாயம் தொடர்பாக கடந்த வருடம் முதல் இருதடவைகள் யாழ். மாநகர சபையினரிடம் அறிவித்து, அதனைத்தறிக்கும்படி கோரிக்கை விட்டிருந்தும் - சபையினரின் அசமந்தப் போக்கால் தமக்கு இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.(55)

# யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட வீதி திருத்தப்பணிகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகளின் திருத்த வேலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பல வீதிகளில் மழை நீர் தேங்கிநிற்பதால் மக்கள் போக்குவரத்திற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே, இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மாநகரசபையில் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்த யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் -

யாழ்.நகர வீதிகள் பலவற்றில் மழை நீர் தேங்கமால் செய்வதற்கான வழிமுறைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. வீதி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையினர் இந்தத் திருத்த வேலைகளுக்கு தாம் முழுமையான பங்களிப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

எனவே, தற் போது வேலைத்திட்டங்கள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# விபத்தில் கால் முறிந்தது

யாழ்ப்பாணம்

இரண்டு சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒருவர் கால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு அம்பன் - குடத்தனையில் இடம்பெற்றது. ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் வயது 57 என்பவரே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# ஒத்திவைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்

யாழ்.இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த விஞ்ஞான விழாவும் இந்துவிஞ்ஞானி நூல் மற்றும்இறுவட்டு வெளியீடும் இன்று வியாழக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்படி நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு மாற்றப்பட்டுள்ளதாக விஞ்ஞான மன்றம் அறிவித்துள்ளது.

# ஓவியங்களின் தொகுப்புக் காட்சி

யாழ்ப்பாணம்

"கடந்த காலமும் கழிவிரக்கமும்" என்ற தலைப்பில் மூத்த ஓவியர் மு.கனகசபையின் ஓவியங்களின் தொகுப்புக் காட்சி யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் இன்று தொடக்கம் அடுத்த மூன்று தினங்களுக்கு காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலை வட்டத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வாக்காளர் அட்டை விநியோகம் குடாநாட்டில் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் யாழ்.மாவட்டத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதித் தேர்தலுக்காக நேற்று ஆரம்பமான வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை இடம்பெறும். எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாக இருக்கின்றபோதும் அன்றும் விசேட வாக்காளர் அட்டை விநியோகம் இடம்பெறும். வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தமது ஆள் அடையாளங்களை உறுதி தபாலகங்களில் அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை வாக்காளர் அட்டை விநியோகம் யாழில் நேற்று ஆரம்பமானதை அடுத்து யாழ் பிரதம தபாலகத்தில் பொலிஸார் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாயில் சிரமதானம்!

சண்டிலிப்பாய்

சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொது நிறுவனங்கள் சிரதமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை - யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை போன்றவற்றால் காக்கைதீவில் கொட்டப்படும் கழிவுகள் பொறுப்பற்ற வகையில் கண்டபடி கொட்டப்படுவதால் அதில் கிடக்கும் பொலித்தீன்கள் காற்றில் அள்ளுண்டு வயல் நிலங்களுக்குச் செல்கின்றன. இதனால் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இதனைத் தடுக்கும் வகையில் சண்டிலிப்பாய் பிரதேச சபை, பாடசாலை மாணவர்களின் உதவியுடன் செயற்திட்டம் ஒன்றை உருவாக்கி முதற்கட்டமாக அதனை அகற்றி வருகின்றது.

இது தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் - யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. காக்கைதீவில் கொட்டப்படும் கழிவு நில் காணி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி

யாழ்.மாவட்டத்தில் கம்பனி முகவர்களாக செயற்படும் வர்த்தகர்களுடன் கிளிநொச்சி நிதித்துறை வணிக ஒன்றியக் கட்டடத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது. எனவே இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள கம்பனி முகவர்களாக செயற்படும் அனைத்து வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சினால்

**யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கோதுமை மா கேள்வி கோரல் ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் - 2005**

01. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட மெற்றிக் தொன் அளவிலான கோதுமை மா விநியோகிப்பதற்கான கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. மா பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்யப்படல்வேண்டும்.

| விநியோகிக்கவேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 ஒக்டோபர் | 400Mt |
| 2005 நவம்பர் | 400Mt |
| 2005 டிசெம்பர் | 400Mt |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2005.10.26 ஆம் திகதி தொடக்கம் 2005.11.10 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 தொடக்கம் பி.ப.3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bin Bond ) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை - *தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்* (அரசாங்க அதிபர். யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.11.11 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பாகச் சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப.3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

4. நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி** என எழுதப்படவேண்டும்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக -PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்
தலைவர்/ அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/ மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
25.10.2005. (சி-4767)

## சிறு விளம்பரம்

### தேவை

நல்லநிலையில் உள்ள M 80 ரக மோட்டார் சைக்கிள் தேவையாகவுள்ளது. விற்க விரும்புபவர்கள் கீழ்வரும் தொலைபேசி எண்ணுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

077 66 24454 (2099)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

ஆர்யா, சோனியா அகர்வால் மற்றும் பலர் நடித்த

ஒரு கல்லூரியின் கதை

தீபாவளி வெளியீடாக
தனுஷ், பிரியாமணி நடித்த
அது ஒரு கனாக்காலம்

காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த

சாணக்கியா

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்

பார்த்திபன் நடித்த
குண்டக்க மண்டக்க...

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

30 முதல்
முதன்முறையாக



விசேட காட்சி
காலை 8.30 மணிக்கு

யாழ்.மாவட்டத்தில்
DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்
சிவகாசி

புத்தம் புதிய
DAIDO
BRAND NEW




0112 341580, 0112 341581

**சுன்னாகம் நாகம்ஸ்**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு மூன்றாவது ஜனத்திரள் வாரமாக
ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி, நடித்த

மழை



காட்சிகள்:-11.00,3.00,7.00, (பழையநேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

கடைசி வாரமாக -சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

கஜினி



அடுத்த வெளியீடு -
விக்கிரம், அஸின், வடிவேல் நடித்த

மஜா

காட்சிகள்:-10.30,2.30, 6.30, மட்டும் (ப.நேரம்)

## மங்களகரமான வைபவங்களுக்கு ஏற்ற வீடு வாடகைக்கு

நல்ல சூழலில் அமைதியான இடத்தில் அழகான வீடு, திருமண வைபவங்கள் மற்றும் மங்களகரமான வைபவங்கள் அனைத்திற்கும் குடும்பமாக தங்கிருயிருந்து கொண்டாடுவதற்கு ஏற்ற வசதியான வீடு வாடகைக்கு உண்டு.

*தொடர்பு:-* த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.07731 86842 (சி-4763)

கலைவட்டம், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

## முதுசம் XI

## கடந்தகாலமும் கழிவிரக்கமும்

மு.கனகசபையின் ஓவியங்களின் தொகுப்புக்காட்சி

27,28,29,30 ஒக்ரோபர் 2005, காலை 10 மாலை 5 மணி வரை

நூலகக் கேட்போர் கூடம், யாழ். பல்கலைக்கழகம்

நுழைவு ரூபா 20/=

(2100)

வாமாஸ்,56/7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம.

வாசிப்பு மாதம்

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"

**வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்**

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

தொடர்புகளுக்கு:
No.03 Torrington Avenue,
Colombo - 7.

காசோலை எனின் அகவிழி என்ற பெயருக்கும், காசுக் கட்டளை எனில் கவலொக்ரவுனில் (Havelock) மாற்றக் கூடியதாக அனுப்பவும்.

T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org

(C/4683)

# இடவசதி குறைந்த இடங்களே தேர்தல் பிரசாரத்துக்கு தெரிவு!

## வாக்காளர்களை ஏமாற்ற இப்படியொரு நாடகம்

கொழும்பு —

விஸ்தீரணம் குறைவான நெருக்கடி மிக்க இடங்களில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை நடத்தி, அதிக மக்கள் கூடியதாகக் காட்டும் பிரசார முயற்சிகளில் பிரதான கட்சிகள் ஈடுபட்டுள்ளன. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

இடவசதி உள்ள பாதுகாப்பான இடங்களில் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, இடநெருக்கடியான இடங்களில் கூட்டங்களை நடத்துவதற்காக- இரு பிரதான கட்சிகளினதும் அமைப்பாளர்கள் பொலிஸாருக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருவதால், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

சில அமைப்பாளர்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பாளர்களுக்கும், சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் அழுத்தங்களைக் கொடுத்து, முக்கிய நகரங்களின் போக்குவரத்துகளில் இடைஞ்சல்களை ஏற்படுத்தி, மக்கள் பெருமளவில் நடமாடும் இடங்களில் கூட்டங்களை நடத்துவதால், ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் செயற்பாடுகளில் பொலிஸாருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பெருமளவான மக்கள் தங்களின் கூட்டத்துக்கு வந்துள்ளதாகக் காண்பிப்பதற்காகவே அமைப்பாளர்கள் இவ்வாறு இடநெருக்கடியான இடங்களைத் தெரிவுசெய்கின்றனர். மேல் மாகாணத்திலேயே இந்த நிலைமை பெருமளவில் காணப்படுவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக நகரின் மத்தியில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களிலேயே கூட்டங்கள் இடம்பெற்றிருப்பதாகவும், இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியிருப்பதாவும் பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து நெரிசலைக் குறைத்து இட வசதியுள்ள இடங்களில் கூட்டங்களை நடத்துமாறு பொலிஸார் - அமைப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதால் அவர்கள் அடிக்கடி பொலிஸாருடன் மோதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் கடமைகளில் ஈடுபடும் பொலிஸாருக்கு 185 மில்லியன் ரூபா

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலின் போதான பொலிஸரின் கடமைகளுக்கென தேர்தல் செயலகம் 185 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களுக்கென பொலிஸார் வழங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும், தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுவதற்காகவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க இந்தத் தொகையை வழங்கியிருப்பதாக தேர்தல் செயலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் நிறுவவுள்ள 10, 486 வாக்களிப்பு நிலையங்களில் ஒரு வாக்களிப்பு நிலையத்துக்கு 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்ற வகையில் சுமார் 3 லட்சம் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

தேர்தலுக்கென வேட்பு மனுத்தாக்கல் செய்த தினத்திலிருந்து சுவரொட்டிகள் மற்றும் கட் அவுட்களை அகற்றுவதற்காக 1300 ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கென ஒரு கோடி 30 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

# தேர்தல் பணிக்கு அரச சொத்துகள்; இதுவரை எழுபது முறைப்பாடுகள்!

கொழும்பு —

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச சொத்துக்களைப் பயன்படுத்துவது குறித்து இதுவரை எழுபதுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை ஆகியவற்றின் வாகனங்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்கென பயன்படுத்தப்படுவதாகவே அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரச சொத்துக்களை முறையற்ற வகையில் கையாள்வதற்கெதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கும், பொலிஸ் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் ரஞ்ஜித் அபேசூரியவுக்கும் இடையில் இன்று விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இதுவரையான அனைத்து முறைப்பாடுகளும் தேர்தல் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ந்து கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து என்ன நடவடிக்கைகளை எடுப்பதென்பது தொடர்பாகவே இவர்கள் ஆராயவுள்ளனர்.

தேர்தல் தொடர்பாக தேர்தல் திணைக்களத்துக்கு கிடைக்கும் ஏனைய முறைப்பாடுகள் பற்றியும் இன்று ஆராயப்படவுள்ளது.

இதனிடையே தபால் மூலம் வாக்களிப்புகள் நடைபெறும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களில் உறுதிப்படுத்தல் அதிகாரிகளாக அங்கு கடமையாற்றும் அதிகாரிகளை நியமிக்காது இருக்க தேர்தல் ஆணையாளர் தாயானந்த திஸநாயக்க தீர்மானித்துள்ளார்.

## சிறுவனை சித்திரவதை செய்த பிக்குவுக்கு விளக்கமறியல்

கொழும்பு —

12 வயதுச் சிறுவனை சங்கிலியால் கட்டி வைத்துச் சித்திரவதை செய்த ஒரு பிக்குவை விளக்கமறியலில் வைக்க புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

புத்தளம் - நவவத்தேகம பொன்வெவ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் பிக்குவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவார்.

கல்கமுவ மீகொல பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயதான இந்தச் சிறுவனுக்கு ஆகமப் பயிற்சிகள் வழங்கி பௌத்த பிக்குவாக்குவதாகக் கோரி இவர் 2 வருடங்களுக்கு முன்பு அழைத்துச் சென்றார்.

அவர் இந்தச் சிறுவனை சித்திரவதை செய்ததுடன், கடுமையாகத் தாக்கியுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பௌத்த பிக்கு விகாரையில் இருந்து வெளியே செல்லும் போது இந்தச் சிறுவனை சங்கிலியால் கட்டிவைத்துவிட்டு செல்லும் வழக்கமுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பதவி விலகினார்!

கொழும்பு —

சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்றுப் பதவியிலிருந்து விலகினார். இது தொடர்பான கடிதத்தை அவர் ஜனாதிபதியிடம் ஒப்படைத்தார்.

இதனையடுத்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

## உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு விரைவில் அதிகரித்த ஓய்வூதியம்

கொழும்பு —

அரச ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகரித்த ஓய்வூதியத்தை உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து இளைப்பாறிய ஓய்வூதியர்களுக்கு குறிப்பிட்ட இந்த ஓய்வூதியம் கடந்த ஆண்டு ஜனவரி மாத்திலிருந்து அமுல் செய்யப்படும் விதத்தில் 22 மாதங்களுக்கானநிலுவையுடன்வழங்கப்படும்.

இந்தத் தீர்மானத்தின் மூலமாக மாநகர சபை, நகர சபை, பிரதேச சபையைச் சேர்ந்த 40 ஆயிரம் ஓய்வூதியர்கள் நன்மை அடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் தோல்வி பயத்தினாலேயே வரவு–செலவு திட்டத்தை தடுக்கின்றனர்

## ஐ.தே.கவை சாடுகிறார் மஹிந்த



கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து விடுவோமோ என்ற அச்சத்தினால்தான் - நாடாளுமன்றத்தில் எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதைத் தடுத்துநிறுத்த ஐக்கிய தேசியக் கட்சி முனைவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர முதலில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இணங்கிய ஐக்கிய தேசியக் கட்சி, இன்று அதனை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவருவதைத் தடைசெய்வதற்காக ஜனாதிபதியைத் தேடி ஓடுகிறது.

தேர்தல் என்பதால் நாட்டின் அபிவிருத்தியை, நாளாந்த நடவடிக்கைகளை நிறுத்தமுடியாதென்றும் அவை உரிய நேரத்தில் - உரியமுறையில் நடைபெறவேண்டும். யார் எப்படி எதிர்த்தாலும் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறுத்த தயாராக இல்லை.

எனது தேர்தல் விஞ்ஞாபனம் வெளியானதையடுத்து அச்சம் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கிறது. வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமென்றும் அவர் மேலும் கூறினார். (01)

## ஜனாதிபதி சந்திரிகாவால் புதிய அமைச்சு உருவாக்கம்



கொழும்பு —

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என்ற புதிய அமைச்சு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா உருவாக்கியுள்ளார்.

அரசியலமைப்பின் 44(1) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைச்சு கடந்த திங்கட்கிழமை முதல் செயற்படும் என்றும், இந்த அமைச்சுக்கு தானே பொறுப்பாக இருப்பேன் என்றும் ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் ஜாலிய மெதகம இந்த அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றுவார்.

## கடற்படை கொமாண்டோ பயிற்சிகள் நிறைவு!

திருகோணமலை —

கடற்படையின் விசேட கொமாண்டோ படைப்பிரிவான - விசேட படகுப் படையணியில் புதிதாகப் பயிற்சிபெற்ற 36 படையினரின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்றது.

கடற்படை நடவடிக்கைப் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் தர்மபிரிய இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கடற்படையின் அணிவகுப்பை ஏற்றுக் கொண்டார்.

14 மாதகாலப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் இந்த நிகழ்வு - விசேட படகுப் படையணி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட முதலாவது அணிவகுப்பு இதுவாகும்.

# பதினாறு இராணுவ கைதிகள் சிறையுடைத்து தப்ப முயற்சி!

கொழும்பு —

கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுக்களின்பேரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 16 இராணுவத்தினர் கேகாலை சிறைச்சாலையிலிருந்து தப்பிச்செல்ல எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இவர்கள் தப்பிச்செல்லவுள்ள திட்டம் பற்றிய தகவல்கள் ஏற்கனவே வெளியாகியதாலேயே இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

சிறைச்சாலை அதிகாரிகளையும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளையும் தாக்கிவிட்டு ஆயுத அறைக்குள் புகுந்து ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சிறைச்சாலை வாகனத்தில் தப்பிச்செல்ல அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து இது தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து கேள்விப்பட்டதையடுத்து சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரூமி மார்கூக், கடந்த திங்கட்கிழமை காலை கேகாலை சிறைச்சாலைக்குச் சென்று விசாரணைகளை நடத்த உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சுமார் 25 கைதிகளை போகம்பரை சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு சிறைச்சாலை ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கேகாலை பொலிஸாரும், கேகாலை சிறைச்சாலை அதிகாரியும் தனித்தனியே விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

# டெண்டுல்கரின் யோசனைப்படியே இர்பான் பதான் களமிறக்கப்பட்டார்!

## இந்திய அணியின் கப்டன் ராவிட்



நாக்பூர்

சச்சின் டெண்டுல்கரின் யோசனைப்படியே இர்பான் பதானை இரண்டாவது வீரராகக் களமிறக்கியதாக இந்திய அணித்தலைவர் ராகுல் ராவிட் தெரிவித்தார்.

இலங்கை அணிக்கு எதிரான வெற்றி குறித்து இந்திய கிரிக்கெட் அணி கப்டன் ராவிட் கூறியதாவது–

பதானை இரண்டாவது வீரராகக் களமிறக்கவேண்டும் என்று டெண்டுல்கரே யோசனை வழங்கினார். டெண்டுல்கரின் இந்த யோசனையை பயிற்சியாளரிடம் தெரிவித்தேன். அவரும் இதற்குச் சம்மதம் தெரிவித்தார். பதானை அப்படி முன்கூட்டி களமிறக்கியதைப் பார்த்து இலங்கை அணியினரே ஆச்சரியப்பட்டிருப்பர். எங்களின் இந்த முயற்சிக்கு நல்ல பலனும் கிடைத்தது. அதிஷ்டம் எங்கள் பக்கம் இருந்தது.

போட்டி தொடங்குவதற்கு முன்பு பதற்றமாக இருந்தது. டெண்டுல்கரும், பதானும் சிறப்பாக ஆடி பதற்றத்தைப் போக்கிவிட்டனர். டெண்டுல்கர் அற்புதமாக ஆடி பழைய திறமையை வெளிப்படுத்தினார். அவர் அற்புதமான ஆட்டக்காரர் ஆவார். டெண்டுல்கர் இடம்பெற்றாலே அணியில் தானாகவே நல்ல மாற்றம் ஏற்படுகிறது.

மைதானத்துக்கு உள்ளேயும், வெளியேயும் டெண்டுல்கரின் பங்களிப்பு அற்புதமாக உள்ளது. காயத்தில் இருந்து மீண்டு அவர் அணியில் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இலங்கைக்கு எதிரான இந்த வெற்றி அணியின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும். சுழற்பந்து வீச்சாளர்களின் பங்களிப்பு சிறப்பாக இருந்தது.

சிறப்பாக துடுப்பெடுத்தாடியதால் பதானுக்கு சகலதுறை ஆட்டக்காரர் என்ற முத்திரையைக் குத்த வேண்டாம். சகலதுறை ஆட்டக்காரர் என்ற தகுதியைப்பெற அவருக்கு நீண்ட காலம் ஆகும். அவர் துடுப்பாட்டம் செய்யும் ஒரு பந்துவீச்சாளர். அவரது முதல் வேலை சிறப்பாகப் பந்து வீசுவதுதான். அதற்காக இங்கிலாந்து சகலதுறை ஆட்டக்காரரான பிளின்ரொப்புடன் பதானை ஒப்பிட்டுக்கூறுவது தற்போதைக்குச் சரியல்ல. இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணியைக் குறைத்து மதிப்பிடமாட்டோம். மேலும் நடக்கவுள்ள ஆறு போட்டிகளிலும் கடுமையான சவால் காத்துக் கொண்டிருக்கிறது என்றே நினைக்கிறேன் என ராவிட் கூறினார்.

# 90 களில் ஆட்டமிழந்தும் சாதனை படைத்தார் சச்சின்!



நாக்பூர்

நாக்பூர் விதர்பா அரங்கில் தனது முதல் சதத்தை சச்சின் அடிப்பார் என எதிர்பார்த்துக்கொண்டிருந்த ரசிகர்களுக்கு ஏமாற்றம்தான். 93 ஓட்டங்கள் எடுத்த நிலையில் விக்கெட்டைப் பறிகொடுத்தார் அவர். இந்த மைதானத்தில் இதற்குமுன் இதேபோல 93 ஓட்டங்களில் அவர் ஆட்டமிழந்துள்ளார்.

90 - 99 ஓட்டங்களுக்குள் அதிகபட்சமாக 9 முறை அவுட்டாகி வித்தியாசமான சாதனை படைத்தார் சச்சின். இதுவரை 38 சதம் அடித்துள்ள சச்சின் 90 - 99 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்த ஒருநாள் போட்டிகளின் பட்டியல் வருமாறு :

| | | |
|---|---|---|
| 90 ஓட்டங்கள் | - அவுஸ்ரேலியா | (1995/1996 - மும்பை) |
| 91 ஓட்டங்கள் | - இங்கிலாந்து | (1997/1998 - சார்ஜா) |
| 95 ஓட்டங்கள் | - பாகிஸ்தான் | (1997/1998 - தாகா) |
| 93 ஓட்டங்கள் | - பாகிஸ்தான் | (1999/2000 - கோபர்ட்) |
| 93 ஓட்டங்கள் | - தென்னாபிரிக்கா | (1999/2000 - நாக்பூர்) |
| 93 ஓட்டங்கள் | - இலங்கை | (2000 - தாகா) |
| 98 ஓட்டங்கள் | - பாகிஸ்தான் | (2002/2003 - செஞ்சூரியன்) |
| 97 ஓட்டங்கள் | - இலங்கை | (2002/2003 - ஜோகனஸ்பேர்க்) |
| 93 ஓட்டங்கள் | - இலங்கை | (2005 - நாக்பூர்) |

# இந்திய அணி வேட்டையாடிவிட்டது!

## – அத்தபத்து வருத்தம்



நாக்பூர்

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களால் தாம் வேட்டையாடப்பட்டதாக இலங்கை அணித் தலைவர் அத்தபத்து கூறியுள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான தோல்வி குறித்து இலங்கை அணி கப்டன் அத்தபத்து கூறியதாவது -

இந்திய அணியின் பெரிய வெற்றிக்கு டெண்டுல்கரின் சிறப்பான ஆட்டம்தான் முக்கிய காரணமாகும்.

டெண்டுல்கர் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி ஆடினால் அவரைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமான விடயமாகும்.

டெண்டுல்கரும், பதானும் இணைந்து சிறப்பாக ஆடி எங்களை நிலைகுலையச் செய்துவிட்டனர். தொடக்கத்தில் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக இருந்தது. பின்னர் அது மாறிவிட்டது. தொடக்கத்தில் விக்கெட்டுக்களை விரைவில் இழந்ததால் வெற்றியை நெருங்கக்கூட முடியவில்லை.

இந்திய அணியினர் நடத்திய வேட்டைக்கு நாங்கள் பலியானோம். அடுத்த போட்டிகளில் இவ்வாறான தவறுகளைச் செய்யாமல் சிறப்பாக ஆடி வெற்றி பெறுவோம் என்று அத்தபத்து மேலும் கூறினார்.

# விளையாட்டு

# பதானை ஆறாவது வீரராக களமிறக்குவதே நல்லது!

## அஜித் வடேகர் சொல்கிறார்

புதுடெல்கி

இந்திய அணியில் முன்பு கபில் தேவ், ரவிசாஸ்திரி, மதன்லால், மனோஜ் பிரபாகர் என சகலதுறை ஆட்டக்காரர்கள் இருந்தனர். இப்போது சகலதுறை ஆட்டக்காரர் என்று சொல்லும் அளவுக்கு வீரர்கள் இல்லை. ஆனால் இர்பான் பதான் பந்து வீச்சிலும், துடுப்பாட்டத்திலும் சிறப்பாகச் செயற்படுகிறார். அவரைச் சகலதுறை ஆட்டக்காரராக்கும் முயற்சி நடந்துவருகிறது. பயிற்சியாளர் கிரேக் சப்பல் இதற்காக அவருக்கு தீவிர பயிற்சி அளித்துவருகிறார்.

இந்திய அணியில் இதுவரை ஆறாவது வீரராகவே பதான் களமிறக்கப்பட்டார். ஆனால், நாக்பூரில் நடந்த இலங்கைக்கு எதிரான போட்டியில் முதல்முறையாக மூன்றாவது வீரராக களமிறங்கினார். இதற்கு நல்ல பலன் கிடைத்தது.

இலங்கை பந்து வீச்சை துவம்சம் செய்து சிக்ஸர், பவுண்டரிகள் என விளாசினார். 70 பந்துகளைச் சந்தித்த அவர் 83 ஓட்டங்களைக் குவித்தார். பதான் எடுத்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையே இதுதான். இதற்கு முன்பு அவர் பாகிஸ்தானுக்கு எதிராக 64 ஓட்டங்களை எடுத்திருந்ததே அதிகபட்ச ஓட்டமாக இருந்தது.

பதானை மூன்றாவது வீரராகக் களமிறக்கியது நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது. அதேபோல் தொடர்ந்து மூன்றாவது வீரராகக் களமிறக்கத் திட்டமிட்டுள்ளனர். ஆனால், இது தொடர்ந்து பலன் அளிக்குமா என்பது போகப்போகத்தான் தெரியும்.

இதுபற்றி முன்னாள் இந்திய கப்டன் அஜித் வடேகர் கூறியதாவது–

சகலதுறை ஆட்டக்காரராக பதான் உருவாகிவருகிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர் ஒரு சிறந்த பந்துவீச்சாளர். அத்துடன் துடுப்பாட்டத்திலும் திறமையாக உள்ளார். ஆனாலும் அவர் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக உருவாக இன்னும் திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

மூன்றாவது வீரராகக் களமிறங்கிய அவரது ஆட்டம் நன்றாக இருந்தது. அவரை மூன்றாவது வீரராக்கிய பெருமை பயிற்சியாளர் கிரேக் சப்பலையே சாரும். ஆனால் தொடர்ந்தும் மூன்றாவது வீரராக இறங்கலாமா? என்பது குறித்து இப்போது எதுவும் சொல்லமுடியாது.

ஒரு போட்டியில் அவர் நன்றாக விளையாடி இருப்பதை வைத்து தொடர்ந்து அப்படி விளையாடுவார் என்று எதிர்பார்க்கமுடியாது. தற்போதைய நிலவரப்படி அவர் ஆறாவது வீரராகக் களமிறங்கவே தகுதியாக இருக்கிறார் என அஜித் வடேகர் கூறியிருக்கிறார். பதான் ஆறாம் நிலை வீரருக்குத் தான் தகுதியானவர் என்று ஏற்கனவே முன்னாள் பயிற்சியாளர் ஜோன் ரைட் கூறியிருக்கிறார்.

இந்திய அணியின் முன்னாள் தொடக்க வீரர் அருண்லால் கூறும்போது - பதானின் நாக்பூர் போட்டித் திறமையை வைத்து இப்போதே சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் என்று மதிப்பிட முடியாது. இன்னும் அவர் எப்படிச் செயற்படுகிறார் என்பதைப் பார்க்க வேண்டும். அதன்பிறகே ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றார்.

# அடுத்த இரு போட்டிகளிலும் அன்ரூ ஹோல் ஆடமாட்டார்!



கேப்டவுன்

தென்னாபிரிக்க அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அன்ரூ ஹோல் நியூஸிலாந்து அணியுடனான இரண்டாவது, மூன்றாவது போட்டிகளில் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்காக அவர் இப்போட்டிகளில் இருந்து இடைவிலகியுள்ளார்.

கேப்டவுனில் எதிர்வரும் வெள்ளியன்றும், போர்ட் எலிஸபெத்தில் ஞாயிற்றுக்கிழமையன்றும் அடுத்த இரு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, டி வில்லியம்ஸ் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

# பாகிஸ்தானுடனான தொடரிலும் இங்கிலாந்து சாதனை படைக்கும்!

## அணித்தலைவர் மைக்கல் வோன்



லண்டன்

பாகிஸ்தான் தொடரில் இளம் இங்கிலாந்து வீரர்களைக் கொண்ட அணி சாதிக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் அணித்தலைவர் மைக்கல் வோன்.

இங்கிலாந்து அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. முதல் டெஸ்ட் நவம்பர் 12 இல் மூல்தானில் ஆரம்பமாகவுள்ளது.

டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் இங்கிலாந்து வீரர்கள் நேற்று பாகிஸ்தான் சென்றனர். இதற்குமுன் லண்டனில் பத்திரிகையாளர் சந்திப்பில் மைக்கல் வோன் கூறியதாவது -

இங்கிலாந்து அணிக்கு இது மிகப் பெரிய சவால் என்றுதான் கூறவேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கள் அணி அபாரமான வெற்றிகளைக் குவித்து வருகிறது. அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான ஆஷஸ் தொடரில் நாங்கள் நடத்திய போராட்டமான ஆட்டமே எங்கள் வெற்றிக்கு வழி வகுத்தது.

இதேமுறையில் விளையாடி பாகிஸ்தானையும் வீழ்த்துவோம். தற்போதைய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களில் ஐந்துபேர் மட்டுமே கடந்தமுறை (2000 - 01) பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் இடம்பெற்றவர்கள். புதிய மைதானம், புதிய சூழலை இளம் வீரர்கள் சந்திப்பார்கள் என நம்புகிறேன்.

சுழற்பந்துவீச்சாளர்கள் எங்களுக்கு நெருக்கடி தருவார்கள் என நினைக்கவில்லை. எங்கள் அணி வீரர்கள் சுழற்பந்து வீச்சை திறமையாகச் சமாளிப்பதில் கைதேர்ந்தவர்கள். ஆஷஸ் தொடரில்கூட வோனைச் சமாளித்து ஆடியதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இந்தச் சுற்றுப்பயணத்தில் சிறந்த இன்ஸ்விங் பந்துவீச்சில் கில்லாடியான சைமன் ஜோன்ஸ் இடம்பெறாததில் வருத்தம்தான். இவரது இடத்தை லூடன், பிளன்கட், அன்டர்ஸன் சரி செய்வார்கள் என எதிர்பார்க்கிறேன். மொத்தத்தில் ஒரு சவாலான தொடரை தெளிவான சிந்தனையுடன் அணுகி வெற்றிபெறுவோம் என்று நம்பிக்கையோடு பேசிமுடித்தார்.

பாகிஸ்தான் தொடருக்கான இங்கிலாந்து டெஸ்ட் அணி வீரர்கள் - மைக்கல்வோன் (கப்டன்), மார்க்கஸ் ட்ரஸ்கோதிக், அன்ரூ ஸ்ரரஸ், இயன் பெல், போல் கொலிங்வூட், அன்ட்ரூ பிளின்ரொப், ஆஸ்லே கைல்ஸ், ஸ்ரீபன் ஹர்மிசன், மத்யூ ஹொகாட், ஜெரைன்ட் ஜோன்ஸ் (விக்கெட் காப்பாளர்), அலெக்ஸ் லூடன், ஹெவின் பீற்றர்சன், லியம் பிளன்கட், மத்யூ பிரியர், ஜேம்ஸ் அன்டர்ஸன். ஷான் உடல்.

# ஈ.எஸ்.பி.என் மீது அக்தர் பாய்ச்சல்



கராச்சி

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையே கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளதையடுத்து, பாகிஸ்தான் வீரர்களுக்கு கராச்சியில் பயிற்சி நடைபெற்று வருகிறது. இதில் பாகிஸ்தான் அதிரடிப் பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் பங்கேற்றுள்ளார்.

இதுபற்றி ஈ.எஸ்.பி.என். விளையாட்டு சன லில் நிகழ்ச்சியொன்று இடம்பெற்றது. இதில் அக்தரின் ஒழுங்கீனமான நடவடிக்கைகளை ஒப்பிட்டு நாய்வாலை நிமிர்த்த முடியாது என்று விமர்சனம் செய்தனர்.

இது அக்தருக்கு கடுமையான கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அந் தத் தொலைக்காட்சி சனல் மன்னிப்பு கேட்கவேண்டும். இல்லையென்றால் வழக்கு தொடருவேன் என்று கூறியுள்ளதுடன், இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் அக்தர் புகார் கூறியுள்ளார்.

எப்போதுமே அக்தருக்கு எதிராக இருக்கும் பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாமும் அக்தருக்கு ஆதரவாக மாறியிருக்கிறார். எங்கள் அணி வீரரை யார் விமர்சனம் செய்தாலும் பார்த்துக்கொண்டிருக்கமாட்டேன் என்று அவர் ஆவேசமாகக் கூறினார்.

# சுனாமி வீடமைப்புப் பணிகள் துரிதகதியில் நடைபெறுகின்றன

## அரச அதிபர் கணேஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சியின் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சுனாமி வீடமைப்பு பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாக அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இது குறித்து அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கடந்த மாதத்தைவிட இந்தமாதம் வீடமைப்பு பணிகள் துரிதமடைந்துள்ளன. இந்தப் பகுதியில் 1000 வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அமைக்கப்பட்ட வீடுகளில் தற்போது கூரை வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயச்செய்கையை மேம்படுத்தும் முகமாகவும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் பலசெயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலங்களில் உள்ள உவர்த்தன்மை தொடர்பான ஆராய்ச்சிகள் அக்ஸன் பாம் தொண்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறே மீன்பிடித் துறையை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கூறினார்.

# மின்தடை குறித்த விபரங்களை தொலைபேசி மூலம் பெறலாம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் ஏற்படும் மின்தடை தொடர்பான விபரங்களை அந்தந்த பிரதேசங்களில் உள்ள மின்சார சபை அலுவலர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாமென இலங்கை மின்சார சபையின் யாழ்.மாவட்ட உதவி பொது முகாமையாளர் சண்முகநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையின் பிரதேச அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள் வருமாறு -

யாழ்.நகரம் - 222 2609, கொக்குவில் - 222 2498, பருத்தித்துறை - 226 3257, சாவகச்சேரி - 060 221 2218, சுன்னாகம் - 222 3001, வட்டுக்கோட்டை - 060 221 2565, வேலணை - 060 2213 483.

இந்த தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு 24 மணிநேரமும் மின்தடை தொடர்பான விபரங்களை அந்தந்த பிரதேச மக்கள் தெரிந்து கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிறப்பு, இறப்பு பதிவாளரை நியமிக்குமாறு கோரிக்கை

சுதுமலை —

மக்களின் நலன்கருதி சுன்னாகத்தை மையமாகக் கொண்டு பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளரை நியமனம் செய்யுமாறு வலிகாமம் தெற்கு பிரதேச மக்கள், யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளர் நாயகத்திடம் கோரியுள்ளனர்.

விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர் தாவடிப் பகுதியில் தங்கியிருந்து பணிபுரிந்துவருவதால், புன்னாலைக்கட்டுவன், கந்தரோடை, குப்பிளான், ஏழாலை போன்ற பகுதிகளிலுள்ள மக்கள் நீண்ட தூரம் சென்று தமது பதிவுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் தமது தேவைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வகையில் சுன்னாகம் பகுதியில் செயற்படக்கூடிய மேலதிக பதிவாளர் ஒருவரை நியமிக்குமாறு மக்கள் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)

# பொலிஸாரின் பாவனையிலிருந்த வாகனம் நெடுந்தீவு பிரதேச சபையிடம் கையளிப்பு!

நெடுந்தீவு —

நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு சொந்தமான பிக்கப் வாகனம் நெடுந்தீவுப் பிரதேச பொலிஸாரிடம் இருந்து நீதிமன்ற கட்டளையின் பேரில் கடந்த 19ஆம் திகதி பிரதேச சபைச் செயலாளர் சு.பொ. தில்லைநாதனிடம் நெடுந்தீவு பிரதேச பொலிஸ் அதிகாரியால் கையளிக்கப்பட்டுள்ளது.

நான் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பிக்கப் வாகனம், 2002ஆம் ஆண்டின் இறுதிக் காலத்தில் ஈ.பி.டி.பி இனருக்கு எதிராக நெடுந்தீவு மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைத் தொடர்ந்து நெடுந்தீவில் நிலைகொண்ட பொலிஸாரால் பயன்படுத்தப்பட்டுவந்தது. இந்த வாகனத்தைப் பெறுவது தொடர்பாக பெரும் முயற்சிகளை மேற்கொண்ட பின்னர் ஊர்காவற்துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு அதன் தீர்ப்பு மூலமே பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த பிக்கப் வாகனத்தைக் கையேற்பதற்கு யாழ்.அரச அதிபர், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் உதவி புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து துண்டிக்கப்பட்ட பிரதேச சபைக்கான தொலைபேசி இணைப்பு இதுவரை வழங்கப்படாமையும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (113)

# கட்டாக்காலி நாய்கள் பிடிப்பு

மானிப்பாய் —

மானிப்பாய் பிரதேச சபையின்கீழ் இயங்கும் பண்டத்தரிப்பு உப-அலுவலக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனால், அந்தப் பகுதியில் வசிப்பவர்களது வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு பண்டத்தரிப்பு பட்டின உப-அலுவலகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் வளர்ப்பு நாய்களுக்கான இலக்கத் தகடுகள் மற்றும் பதிவு அட்டைகள் பட்டின சபை அலுவலகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# முள்ளியில் 180 குடும்பங்களுக்கு கூரைத்தகடுகள் வழங்கப்படவுள்ளன

சுதுமலை —

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்தால் ஆனைக்கோட்டை முள்ளிக் கிராமத்தில் 180 குடும்பங்களுக்கு கூரைத் தகடுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் பெருமழையினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே இந்தக் கூரைத் தகடுகள் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர், ஆனைக்கோட்டை கிராம அலுவலகர், ஆகியோரின் பெருமுயற்சியினால் இக்கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளதாகவும், கூரைத் தகடுகள் வழங்கப்படுவதால், பாதிக்கப்பட்ட தமக்கு இந்த முறை பெய்யும் மழையிலிருந்து பாதுகாப்புப் பெறமுடியுமென முள்ளிக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஆனைக்கோட்டை கிராம அலுவலர் பிரிவிலுள்ள முள்ளி, சோமசுந்தரம் வீதி, மூன்றாம் கட்டை ஆகிய பகுதிகளிலுள்ள வறிய குடும்பங்களுக்கு 12 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெண்புறா, யு.என்.எச்.சி.ஆர் ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தினரின் அனுசரணையுடன் பயனாளிகளுக்கான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (91)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

வட்டுக்கோட்டை —

நடந்துமுடிந்த 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் - வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் -

ம. பிரபு, வி. ஸ்ரீசுபாங்கி, சி. தாரகா, ஸ்ரீ. சொரூபிகா ஆகிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

# திருவடிநிலை பகுதியில் இறங்குதுறை திறப்பு!

சுழிபுரம் —

கடற்தொழிலாளர் பாவனைக்கென திருவடிநிலை கடற்கரையில் இறங்குதுறை ஒன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த இறங்கு துறை எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2 மணியளவில் -

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவின் பொருளாதார பாதுகாப்புத் தொடர்பாளர் ஜோன் டிக்சனால் திறந்துவைக்கப்படும். இந்த நிகழ்வுக்கு வலி. மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்ராஜ், யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர், வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை வண.பிதா யோசுவா உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (48)

# நடைபாதை வியாபாரத்திற்கு தடை; மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை!

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்.நகர பகுதியில் அண்மைக் காலமாக நடைபாதை வியாபாரம் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துக்களும் அதிகரித்து வருவதுடன் சுற்றுச் சூழலுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனைத் தடுப்பதற்காக யாழ்.மாநகர சபை பல நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறது.

நடைபாதை வியாபாரத்துக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டபோர்திலும், ஒரு சில வியாபாரிகள் தமது வியாபாரத்தைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றார்கள். இதைத் தடுப்பதற்கு மாநகர சபை விசேட குழு ஒன்றை உருவாக்கி, முழுநேரமும் நடைபாதை வியாபாரத்தை மேற்கொள்பவர்களைக் கண்காணிப்பதுடன், அவர்களின் உடமைகளைப் பறிமுதல் செய்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும்

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் நிறுவுனரான ஜெயரத்தினம் நினைவு தினமும், கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கலாநிதி ச.சிறிபவானந்தராஜாவும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும், கௌரவ விருந்தினராக கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், யாழ்.மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (72)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : கே.எஸ்தர்

முகவரி : தெல்லிப்பளை.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு :

கூப்பன்தவு புத்தம், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# முஸ்லிம் மக்களுக்குரிய காணிகள் போலி ஆவணங்களுடன் விற்பனை!

யாழ்ப்பாணம் —

யாழ்.நாவாந்துறைப் பகுதியில் வடக்கு சோனகத் தெருவில் அமைந்துள்ள முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகள், முகவர்களால் போலி ஆவணங்களைக் காட்டி விற்கப்பட்டு வருகின்றது. எனவே, இந்தப் பகுதிகளில் காணிகளைக் கொள்வனவு செய்ய முனையும் பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும், இவ்வாறான வேளைகளில் மேற்படி முஸ்லிம் பகுதியில் குடியமர்ந்துள்ள முக்கிய முஸ்லிம் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மாநகர சபையின் முன்னாள் உதவி மேயர் எம்.ஜி.பசீர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடக்கு சோனகத் தெருவில் உள்ள பறைச்சேரி வெளி குடியேற்றக் காணி 42 குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகளை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தூக்குமரக்காடு என்று கூறி போலி ஆவணங்களைத் த்யாரித்து பெருந்தொகைப் பணத்திற்கு விற்கப்பட்டு வருகின்றது.

எனவே, போரினால் பாதிக்கப்பட்ட இந்த மக்களின் காணிகளை விற்பனை செய்வது தவறானது. இந்தப் பகுதிகளில் தற்போது மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். எனவே, இவ்வாறான ஊழல்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

# மரக்கன்றுகள் விநியோகம்

சுதுமலை —

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார்.

சூழல் பாதுகாப்பு முன்னோடித் திட்டத்தை முன்னிட்டே முன்னுரிமை அடிப்படையில் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (91)




# சுகவாழ்வுக்கு அச்சுறுத்தல் இல்லாத நஞ்சு தன்மையற்ற மரக்கறிகள்...

**அறிமுகம்**

தற்காலத்திற்கும், இனிவருங்காலத்திற்கும் ஆரோக்கியமான நிலையான விவசாய முறைமையொன்று மிகவும் வேண்டப்படும் காலகட்டம் இது.

உயர் விளைச்சல் தரும் பயிரினங்களையும், அவற்றின் உற்பத்தித்திறனுக்கு அனுசரணையான விவசாய இரசாயனங்களின் பயன்பாட்டையும் உள்ளடக்கியதான இரசாயன முறை விவசாயமானது- (Chemical Farming) உணவு உற்பத்தியினை அதிகரிக்கவேண்டுமென்பதனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றது.

அதிகரித்துவரும் விவசாய இரசாயனங்களின் கண்மூடித்தனமான பயன்பாட்டால் சுற்றுச்சூழல் (Enviornment) மாசடைந்து வருவதோடு, விளைநிலங்கள் பல அவற்றின் உற்பத்தித்திறனை இழந்து பாலைவனமாக மாறிவருகின்றன.

விவசாய இரசாயனங்களின் நச்சுத்தன்மையால், மனிதரினதும் ஏனைய உயிரினங்களினதும் சுகவாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகின்றது.

இலங்கையிலே செறிவான பயிர்ச்செய்கையினை (Intensive Cultivation) மேற்கொள்ளும் மாவட்டங்களுள் யாழ்ப்பாண மாவட்டமே முதன்மை வகிக்கின்றது. இந்த மாவட்டத்திலே மண்ணிலும், நிலத்தடி நீரிலும் பல பிரச்சினைகள் தோன்றிவருவதாகத் தெரிகிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சில கிணறுகளில் நைதரேற்று ($No_3$) செறிவு பாதுகாப்பு மட்டத்திலும் (45 mg/l) 100-150% அதிகரிப்பினைக் கொண்டு காணப்படுகிறது. குடிநீரில் லீற்றர் ஒன்றுக்கு 45மில்லிகிராமுக்கு மேல் நைதரேற்றுச் செறிவு இருக்குமாயின், அது மனித உடலில் நச்சுத் தன்மையினை ஏற்படுத்தும். இவ்வாறான நச்சுத்தன்மையினால் நீலக் குழந்தைகள் (Blue babies) பிறக்கவும், சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படவும் சந்தர்ப்பம் இருக்கிறது. மேலும், பீடை நாசினிகளின் நச்சூட்டலினால் -உயிரிழப்பும், உயிரபத்தினை ஏற்படுத்தும் பல நோய்களும், உடற்கோளாறுகளும் ஏற்படுகின்றன. இவற்றுள் புற்றுநோய், குறைப்பிரசவம், நரம்பு சம்பந்தமான நோய்கள் என்பற்றினைக் குறிப்பிடலாம். புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவருவோரில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விவசாய இரசாயனங்களின் நச்சுத்தன்மையால் ஏற்படுகின்ற தீய விளைவுகளைக் கருத்திற்கொண்டே முற்றிலும் சேதனப் பொருட்களை மட்டுமே பயன்படுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் சில இடங்களில் சேதன முறை விவசாயப் பரீட்சார்த்தத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தி வருகின்றது. கெயர் சர்வதேசம் (இலங்கை). இந்தப் பரீட்சார்த்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**இப்பரீட்சார்த்தத் திட்டத்தின் முதன்மையான நோக்கங்கள்**

இப்பரீட்சார்த்த திட்டத்தின் முதன்மையான நோக்கங்கள் பின்வருமாறு-

✷யாழ்ப்பாண மாவட்ட மக்களின் ஆரோக்கியமான வாழ்வினை நிச்சயப்படுத்திக் கொள்ளவும், இம்மாவட்டத்தின் இயற்கைச் சூழல் மாசடைந்து வருவதனை இயன்றளவில் குறைத்தலும்.

✷இயற்கை மூலவளங்களைச் சிறந்த முறையில்ப் பயன்படுத்தி உணவுற்பத்தியை அதிகரிக்கச் செய்தலும் உற்பத்திச் செலவினைக் குறைவடையச் செய்தலும்.

✷ஆரோக்கியமான நிலையான விவசாய முறைமையொன்று பற்றி மக்களிடையே நம்பிக்கையினையும் விழிப்புணர்வினையும் ஏற்படுத்துதல்.

✷சேதன முறையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறிகளுக்கு இந்த மாவட்ட மக்களிடையே வரவேற்பிருக்கின்றதா என்பதனை அறிந்துகொள்ளல்.

**இப்பரீட்சார்த்தத் திட்டத்தின் துணையான நோக்கங்கள்**

இந்து பரீட்சார்த்த திட்டத்தின் துணையான நோக்கங்கள் பின்வருமாறு;

✷எதிர்காலத்தில் விவசாய இரசாயனங்களின் பயன்பாட்டினைத் தவிர்க்கச் செய்தல். அல்லது

சிபார்சு செய்யப்பட்ட அளவில் அவற்றினைப் பயன்படுத்தச் செய்தல்.

✷இயற்கை மூல வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளச் செய்வதன் மூலம். அல்லது

சிபார்சு செய்யப்பட்ட அளவில் விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்தச் செய்வதன் மூலம் எம் எதிர்காலச் சந்ததியினரின் ஆரோக்கியமான வாழ்வுக்கும் எதிர்கால விவசாயத்துக்கும் ஏற்புடையதாக இயற்கைச் சூழலை மாற்றுதல்.

**இப்பரீட்சார்த்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் இடங்களும், பயிர்செய்யப்பட்டு வரும் பயிரினங்களும்**



யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏறக்குறைய 4000 ச.மீ (1ஏக்கர்) பரப்பளவில் இப்பரீட்சார்த்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

கோப்பாய், அராலி, ஆவரங்கால், பிரான்பற்றுதோப்பு மற்றும் கதிரிப்பாய் போன்ற இடங்களில் -

வெண்டி, மிளகாய், கத்தரி, கறிமிளகாய், தக்காளி, பாகல், பீற்றூட், புடோல், கரட், கீரை, பயிற்றை, மற்றும் வெண் காயம் ஆகிய பயிரினங்கள் பயிர் செய் யப்பட்டு வருகின்றன.

**இப்பரீட்சார்த்தத் திட்டத்தன் கீழ் பயன்படுத்தப்பட்ட சேதனப் பொருட்களும் கையாளப்பட்ட பொறிமுறைகளும்**

இந்தப் பரீட்சார்த்தத் திட்டத்தின் கீழ் பின்வரும் சேதனப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.

✷ மாட்டெரு, பசுந்தாட் பசளை மற்றும் கூட்டெரு போன்ற மண் சேதன வளமாக்கிகளும், சீமைக்கிழுவை இலைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட திரவ சேதன வளமாக்கியும்,

✷ உள்ளிக் கரைசல், வேப்பஞ்சாறு, புகையிலைச்சாறு, மிளகாய்ச்சாறு, மாட்டுச்சலமும் சாணமும் மற்றும் சாம்பல் ஆகிய உயிரியல் பீடை கொல்லிகள்.

**இப்பரீட்சார்த்தத் திட்டத்தின் கீழ் பின்வரும் பொறிமுறைகள் கையாளப் பட்டன.**

✣ பீடை துரத்தியாகப் பயிர்களுக்கிடையிலும் பயிர்களைச் சுற்றியும் செவ்வந்தி மற்றும் எருக்கலையின் கிளைகள் ஆகியன நாட்டப்பட்டன.

✣நோயினால் பாதிக்கப்பட்ட பயிர்களும், பாதிக்கப்பட்ட இலைகளும், கைகளினால் பிடுங்கி அகற்றப்பட்டன;

✣களைகட்டல் கைகளினால் மேற்கொள்ளப்பட்டது.

**இப்பரீட்சார்த்தத்திட்டத்தின் நேரடியான மற்றும் மறைமுகமான பயனாளிகள்**

✷ஏழை விவசாயிகளும், அவர்களின் குடும்பத்தினரும் நேரடியான பயனாளிகள் ஆவர்.

✷வியாபாரிகளும், நுகர்வோரும் இம் மாவட்டத்தில் வாழ்கின்ற சகல மக்களும் எம் வருங்காலச் சந்ததியினரும் மறைமுகமான பயனாளிகள் ஆவர்.

சேதனமற்ற விவசாயமானது (Organic Farming) மிகவும் இலாபகரமானது. மேலும், இம்முறையினைக் கைக்கொள்ளுவதன் மூலம் நாம் எமது சுகவாழ்வினையும் எமது இயற்கைச் சூழலையும் விலை கொடுக்க வேண்டியதில்லை.

விவசாய இரசாயனங்களின் கண் மூடித்தனமான பயன்பாட்டினால் பாரிய சூழலியற் பிரச்சினைகள் தலைதூக்கி வருகின்ற இவ்வேளையில், எம்முடையதும், எம் எதிர்காலச் சந்ததியினரதும் சுகவாழ்வுக்கும், எமது இயற்கைச் சூழலுக்கும், தற்கால மற்றும் எதிர்கால விவசாயத்துக்கும் ஆரோக்கியமான சேதனமுறை விவசாயம் பற்றி விவசாயிகளும், மாணவர்களும், ஏனையோரும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

## இது பற்றிச் சிந்திப்போம்...!

தொழிலாளர்கள் வர்க்கத்தின் நாளாந்த ஊதியத்தினைப் பறித்து, நிலையான மூலதனமாக்க முயலும் எந்த முதலாளி வர்க்கமும் நிலைத்ததாக சரித்திரமில்லை.

# "இலங்கை வங்கியின்" சுயதொழில் கடன்திட்டம்

**நேரடிக்கடன் திட்டம்**

இக்கடன் உதவியைப் பெறுபவர்கள் நேரடியாக அருகிலுள்ள இலங்கை வங்கியுடன் தொடர்புகொள்ளலாம். இக்கடனுதவியை தனிப்பட்டவர்களும் குழுக்களாக இணைந்து செயற்படுவோரும் பெறமுடியும்.

**நிறுவனம் மூலம் கடனுதவி பெறல்**

கூட்டுறவுச்சங்க விதிமுறைகளுக்கு அமைய நிறுவப்பட்ட சகல கூட்டுறவு நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் இவற்றுள் அடங்கும். இந்த நிறுவனங்கள் வங்கியிலிருந்து கடனைப் பெற்று, சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு மறுகடன் நிதியுதவியாக வழங்குகிறது. இது நிறுவனங்கள் ஊடான இலங்கை வங்கியின் கடன் திட்டமாகும்.

**கடன் கோருவோருக்கான தகைமைகள்**

1. வேலையற்றோர்
2. குறை உழைப்பாளர்
3. வங்கி வாடிக்கையாளர். இலங்கை பிரஜை தேசிய அடை யாள அட்டை உடையவர்
4. குறித்த தொழில் முயற்சியில் அனுபவம் அல்லது திறமை கொண்டவர்
5. தனிநபர் அல்லது 5 பேரைக் கொண்ட குழுவினர் குழு அடிப் படையில் நேரடியாகவோ அல்லது கடனுதவி வழங்கும் நிறுவனங்கள் மூலமாகவோ கடனுதவியைப் பெறலாம்.

**கடனுதவியின் நோக்கம்**

1. விவசாயம்
2. மிருக வளர்ப்பு
3. விவசாயம் சார்ந்த உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில், சிறுகைத்தொழில், குடிசைக் கைத்தொழில், சேவை அடிப்படையிலான தொழில்கள், வர்த்தக முயற்சிகள் போன்றவற்றுக்கு இக்கடனுதவி வழங்கப்படும்.

**கடன் தொகை**

ஒரு தனிப்பட்டவர் 5 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் வரையும் கடனாகப் பெறமுடியும். 5 பேர் கொண்ட குழுவுக்கு 25 ஆயிரம் தொடக்கம் 1,25000 வரையும் கடன் வழங்கப்படும். இதனை சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

இவரது மொத்தக்கடன் 25 ஆயிரத்துக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். திட்டக்குழுவாயின் 125000 இற்கு மேற்படாது இருக்கவேண்டும்.

❄ வட்டி 18%

❄ மீளளிப்பு காலப்பகுதி

இக்கடன் பெறுபவருடைய யோக்கியதாம்சங்கள் மற்றும் அவர் கொடுக்கும் பிணை என்பவற்றைப் பொறுத்துக் காலம் 39-60 மாதம் வரை நிர்ணயிக்கப்படும்.

**வேறு சில நிபந்தனைகள்**

இவர் சமர்ப்பிக்கும் சுயமுயற்சித் திட்ட அறிக்கை மூலம் இத்திட்டத்தின் வருவாயை வங்கிக்கு உறுதிப்படுத்த வேண்டும். மொத்தச்செலவில் 20% செலவை கடனாளி திட்டத்திற்கு தனது முதலீட்டுப் பங்களிப்பாக செலுத்த வேண்டும். கடனாளியின் முதுலீட்டுப் பங்கு திட்டத்திற்கு திட்டம் மாறுபடலாம்.

**கடனுக்கான பிணைபற்றிய விபரம்**

1. 10 ஆயிரம் ரூபா கடன்

இந்தக் கடனைப் பெற ஒரு சாதாரண இலங்கை வங்கியின் வாடிக்கையாளர் பிணையாளியாக நின்றால் போதும்.


2. 10 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் வரையான கடன்

இந்தக் கடனைப் பெற விவசாயம் கால்நடை வளர்ப்பு போன்ற முயற்சிக்கு காப்புறுதி செய்திருக்கவேண்டும். சிறுகைத்தொழில் முயற்சியாளரின் காணி உறுதியை வங்கியில் வைப்புச்செய்ய வேண்டும். சிறுகைத்தொழில் முயற்சியில் ஈடுபடும் உபகரணங்கள் வங்கியில் அடகுவைக்கப்படவேண்டும். இருவர் தனிப்பட்ட பிணையாக இருக்கவேண்டும். பிணையாளருடைய வருமானம் பற்றி வங்கியைத் திருப்திப்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.

இளவல்

# யாழ்.மாவட்டத்தில் - உருளைக்கிழங்கு உற்பத்தியும் களஞ்சியப்படுத்தலும்

வெளிநாடுகளில் உருளைக்கிழங்கு- மக்களுக்கும், கால்நடைகளுக்கும் உணவாக பாவிக்கப்படுகின்றது. எமது நாட்டில் இது மக்களுக்கு மட்டுமே உணவாகப் பயன்படுகின்றது. யாழ்.மாவட்டத்தின் தற்போதய சனத்தொகை 512,933 ஆகும். யாழ்.மக்களுக்கு தேவையான உருளைக்கிழங்கு எமது விவசாயிகளிடம் இருந்தும், கொழும்பில் இருந்தும், கப்பல் மூலம் இறக்குமதி செய்தும் பெறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் நவம்பர் மாதம் தொடக்கம், பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது. பெப்ரவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிவரை அறுவடை செய்யப்பட்ட உடனேயே சந்தையில் விற்பனைக்கு வந்துவிடுகின்றது. இந்தக் காலப் பகுதிகளில் உருளைக்கிழங்கின் விலை கிலோ 30 தொடக்கம் 40 ரூபா வரை விற்கப்படுகின்றது. இதன் பின் உருளைக்கிழங்கின் விலை படிப்படியாகக் கூடி கிலோ 250 ரூபா வரை விற்கப்படுகின்றது. கொழும்பில் இருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்பட்டால் விலை திரும்பவும் குறைகின்றது. யாழ். மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக உருளைக்கிழங்கு பயிரிடப்பட்ட பரப்பின் அளவும், அறுவடை செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் அளவும்



அட்டவணையில் தரப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து காலத்துக்கு காலம் இறக்குமதி செய்த அளவு தெரியவில்லை. யாழ்.மாவட்டத்திற்கு தேவையான உருளைக்கிழங்கை இங்கேயே பயிரிடமுடியும். முறையாக களஞ்சியப் படுத்தி வைத்தால் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்வதைக் கூடத் தடைசெய்யலாம்.

உருளைக்கிழங்கை களஞ்சியப்படுத்துவது ஒரு குளத்தில் தண்ணீரைச் சேமிக்கும் செயற்பாட்டுக்கு ஒப்பாகும். மழை காலத்தில் மேலதீகமாக வரும் நீரை அணைகட்டி, குளத்தில் சேமிக்கின்றோம். கோடைகாலத்தில் நீர் தேவைப்படும்போது வாய்க்கால் மூலம் குளத்தில் இருந்து நீரைப் பெறுகின்றோம். இதேபோல உருளைக்கிழங்கை மேலதீகமாக அறுவடை செய்யும் போது களஞ்சியப்படுத்தி வைத்து தேவையான நேரம் பாவிக்கலாம். இதன் மூலம் வருடம் முழுவதும் யாழ்.மக்களுக்கு உருளைக்கிழங்கு குறைந்த விலையில் கிடைக்கக்கூடியதாக இருக்கும். உருளைக்கிழங்கை களஞ்சியப்படுத்துவதற்கு மூன்று வகையான களஞ்சியங்கள் உள்ளன.

1. சாதாரண களஞ்சியம்.
2. இடைத்தரக் களஞ்சியம்.
3. குளிர்சாதனக் களஞ்சியம்.

**களஞ்சியப் படுத்தலின் முன் பின் வரும் தரவுகள் தெரிய வேண்டும்.**

1. களஞ்சியப் படுத்தும் உருளைக்கிழங்கின் அளவும், காலமும்.
2. ஒவ்வொரு கிழமையும் அறுவடை செய்யும் அளவு.
3. களஞ்சியப்படுத்தப்படும் காலத்தின் அளவு.

**சாதாரண களஞ்சியம்**

மிகவும் இலகுவான தாமதப்படுத்தும் முறையே மிகவும் சாதாரண களஞ்சியப் படுத்தும் முறையாகும். இந்த முறை மூலம் 3 மாதத்துக்கு நிலத்தின் கீழ் களஞ்சியப்படுத்தி வைக்கமுடியும். நிலத்தின் தன்மை, பருவ காலத்தின் தன்மை, உருளைக்கிழங்கில் ஏற்படும் நோய்கள், பிராணிகளால் ஏற்படும் தாக்கங்கள் என்பனவற்றில் தங்கியுள்ளது. இந்த முறையினால் ஏற்படும் சில நன்மைகள்.

1. மிகவும் குறைந்த செலவில் இந்த முறை மூலம் களஞ்சியப் படுத்தலாம்.
2. சந்தையில் தேவையான நேரம் அறுவடைசெய்யலாம்.
3. வேறு களஞ்சிய முறையிலும் பார்க்க உருளைக்கிழங்கு பார்வைக்கு நன்றாக (Fresh) இருக்கும்.

**நிலத்தில் களஞ்சியப்படுத்தும் முறை**

மிகவும் சுலபமானது. செலவும் குறைவு. அறுவடையான கிழங்கை வைக்கோலின் மேற்குவித்து வைத்து. வைக்கோலினாலும், மண்ணாலும் மாறி மாறி மூடிவைத்துப் பாதுகாப்பதே இந்த முறையாகும். காற்றோட்டம் உட்செல்வதற்கு 2x2 மரக்குற்றியினால் முக்கோண வடிவில் துவாரம் விடப்பட்டுள்ளது. சிறிய கமக்காரருக்கு இது உகந்த முறையாகும். ஆர்ஜென்டினா, பெரு ஆகிய நாடுகளில் இம்முறை பாவிக்கப்படுகின்றது. சிறு சிறு கும்பல்களாக முக்கோண வடிவில் உருளைக்கிழங்கை குவித்து வைத்து காய்ந்த ஓலைகளினாலும் வைக்கோலினாலும் மூடி வைத்தும் பாதுகாக்கலாம்.

**நிலத்தில் களஞ்சியப்படுத்தும் முறை இடைத்தர களஞ்சியம்**

இது விசேடமாகக் கட்டப்பட வேண்டிய களஞ்சியம். நிலத்தின் கீழ்ப் பகுதியிலும் பக்கச் சுவர்களிலும் காற்றோட்டம் செல்லக் கூடியவாறு இதனை அமைக்க வேண்டும். எமது யாழ்.விவசாயிகளினால் இப்படியான களஞ்சியங்களை கட்டக்கூடிய சாத்தியம் இல்லை. கூட்டுறவு சங்கங்கள், விவசாய சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்கள் முயற்சி எடுத்து இதனைக் கட்டலாம்.

**குளிர் சாதனக் களஞ்சியம்**

தனிப்பட்ட விவசாயிகள் இந்தக் களஞ்சியத்தை உருவாக்க முடியாது. இதற்கு அதிக மூலதனம் தேவை. விவசாயத் திணைக்களம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்படியான களஞ்சியங்களை உருவாக்கி, விவசாயிகளுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கி உதவி செய்யலாம். யாழ். மாவட்ட விவசாயிகள் - குறைந்த அளவு நிலப்பரப்பிலேயே உருளைக்கிழங்கைப் பயிரிடுவதனால், சாதாரண களஞ்சியப்படுத்தும் முறையே இவர்களுக்கு உகந்த முறையாகும்.

**யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி**

| வருடம் | விஸ்தீரணம் (கெக்டர்) | உற்பத்தி (தொன்) |
|---|---|---|
| 89/90 | 150 | 1,112 |
| 90/91 | தரவு இல்லை | தரவு இல்லை |
| 91/92 | தரவு இல்லை | தரவு இல்லை |
| 92/93 | 88 | 651 |
| 93/94 | 71 | 518 |
| 94/95 | 140 | 1,050 |
| 95/96 | தரவு இல்லை | 37 |

| வருடம் | விஸ்தீரணம் | உற்பத்தி |
|---|---|---|
| 1999/2000 | (கெக்டர்) 41.5 | தொன் 415 |

| உற்பத்தி செய்த காலம் நவம்பர் - பெப்ரவரி | |
|---|---|
| அறுவடை செய்த காலம் | பெப்ரவரி 20%<br>மார்ச் 55%<br>ஏப்ரல் 25 % |

கே.விஜயரத்தினம்

நன்றி - பசுந்தோகை -

# நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உதவும் 2டீ கோலா (2D Cola)

நீரிழிவு நோயாளர்கள் 2D Cola வைக்கட்டுப்பாடு இன்றி பருகப் பருக குருதியில் குளுக்கோஸ் மட்டம் குறைந்து நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் வருகிறது. 2 D Cola வின் இந்தச் சிறப்பு செயற்பாட்டுக்குக் காரணம் - அதில் சீனியோ, சக்தி ஊட்டப் பொருட்களே எதுவும் இல்லை. 2D Cola வில் சீனிக்குப் பதிலாக சக்தி இல்லாத சீனியிலும் பார்க்க 200 மடங்கு இனிப்பும் சுவையும் கூடிய ஒரு பதார்த்தம் பயன்படுத்தப் படுகிறது. அதே சமயம் ஏனைய மென்பாணங்களைப் போல் இனிப்பாகவும் சுவையாகவும் 2D Cola காணப்படுகிறது.



நீரிழிவு நோயாளர்களுக்கும் உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கும் என உருவாக்கப்பட்ட மென்பானமே 2D Cola ஆகும். இதில் 2D என்பதில் ஒரு D - Diet என்பதையும் இன்னொரு D -Diabetes என்பதையும் என்பதையும் குறித்து நிற்கிறது. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக Biotec நிறுவனம் பல ஆராய்ச்சிகளின் மூலம் 2D Cola என்ற மென்பானத்தை உருவாக்கி உள்ளது. 2D Cola வில் ஏனைய மென்பானத்தில் இருப்பது போன்று கலோரி, சீனி என்பன இல்லை ஏனைய பல மென்பானங்கள் இனிப்பாக இருப்பதற்கு அதில் சேர்க்கப்பட்டுள்ள சீனியே அடிப்படைக் காரணமாகும். சீனி அதிகளவில் உட்கொள்வதால், பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சீனியிலுள்ள சக்தி எமது உடலின் நிறையையும், கொலஸ்ரோல், ரைக்கிளிசைரைட் போன்ற லிப்பிட்டுக்களையும் குருதியிலும் உடம்பிலும் அதிகரிக்கச் செய்கிறது. இதனால் மென்பானங்களைப் பருகுவதனால் உடல் எடை அதிகரிப்பது மட்டுமல்லாமல், அசர்களின் லிப்பிட்டு புரோபைலையும் மாற்றி குருதி குழாய்களில் கொலஸ்ரோல் வீழ்படிவம் செய்வதுடன்- குருதி அழுத்தம், அமுக்கம், இருதய நோய், பாரிசவாதம் போன்ற நோய்களுக்கும் வழிவகுக்கும்.

2D Cola ஏனைய மென்பானங்கள் போல் இனிப்பாக இருந்தாலும், இதில் சீனி சேர்க்கப்படவில்லை சீனிக்குப் பதிலாக இருஅமினோ அமிலங்கள் கொண்ட ஒரு மூலக்கூற்று பொருளைப் பயன்படுத்தி, இனிப்புச் சுவை உருவாக்கப்படுகிறது. இந்த மூலக்கூறு - சீனியிலும் பார்க்க 200 மடங்கு இனிப்பு கூடியதாகும். சீனி பயன்படுத்தும் அளவில் இது 1/1000 பங்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. இதன் விளைவாக 2D Cola வில் கலோரியோ, சக்தியோ இல்லை. எனவே, 2D Cola உடல் பருமனை அதிகரிக்கமாட்டாது. சீனி சேர்க்கப்படாது இருப்பதால், கொலஸ்ரோல் தயாரிப்பும், ரைக்கிளிசைரைட் தயாரிப்பும் பெருமளவு குறைய ஏதுவாகிறது.

நீரிழிவு நோயாளர்கள் 2D Cola வைப் பருகுவதால், குருதியில் குளுக்கோஸ் கூடுவதற்கு சாத்தியம் இல்லை. 2D Cola பருகுவதால், இவர்கள் உட்கொள்ளும் எல்லா வகையான உணவுகளும் கூடுதலாக ஒட்சியேற்றம் அடைகிறது. எனவே, கொழுப்பாகவோ, கொலஸ்ரோலாகவோ சேமித்து வைக்கும் அளவு குறைகிறது. மேலும் நீரிழிவு நோயாளர்கள் 2D Cola வைப் பருகுவதனால், குருதி குளுக்கோஸ் குறைவதுடன் குருதி கொலஸ்ரோல் ரைக்கிளிசைரைட் என்பனவும் குறைவடையும்.

உமது உடலிலுள்ள இரு அமினோ அமிலங்களால் உருவாக்கப்பட்ட இனிப்பு சுவையூட்டில் ஒரு தீங்கும் இல்லையென உலக சுகாதார ஸ்தாபனம் சான்று வழங்கியுள்ளது. இந்தச் சுவையூட்டி GRAS (Genarally Regraded AS Jaff, பொதுவாக ஒரு தீங்கும் விளைவிக்காத பொருள்) என்னும் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். அமினோ அமிலங்களினால் ஆன இனிப்பு சுவையூட்டியைப் பாவிப்பதனால், எவருக்கும் (நீரிழிவு நோயாளர்கள் சாதாரண மனிதர்கள்) எந்த வகையான தீங்குகளோ, பக்க விளைவுகளே ஏற்படவில்லை.

Diet பண்ணுபவர்களுக்கும், Diabetes உள்ளவர்களுக்கும் உகந்த 2D Cola போன்ற மென்பானம் இலங்கையில் வேறு எந்த நிறுவனமும் இதுவரையில் தயாரிக்கவில்லை. இலங்கையில் Bio Tec நிறுவனமே Diet Diabetes 2D Cola வை முதன் முதலில் தயாரித்து சந்தைக்கு விடுகின்றது.

நீரிழிவு உள்ளோரையும் உலக சுகாதார நிறுவனம் ஏனைய மக்கள் போலவே கருதுகின்றது. அன்றாடம் உழைக்கும் இவர்களும், எல்லா வகை உணவுகளையும், மென்பானங்களையும் சுவைக்க முடியாமல் வருந்துகின்றார்கள். இவர்களும் ஏனையவர்களைப் போல் மென்பானங்கள் பருகி மகிழ்ந்திட கூடிய வகையில் 2D Cola தயாரிக்கப்பட்டுள்ளது.

எமது நிறுவனம் நீரிழிவு நோயைக் கையாள்வதற்கு இரு யுத்திகளை மேற்கொண்டுள்ளது.

1. குருதியில் குளுக்கோஸ் அதிகரிக்க ஏதுவாக உள்ள பதார்த்தங்களை உணவிலுருந்தோ அல்லது மென்பானங்களிலிருந்தோ அகற்றுதல்

உதாரணம் - 2D Cola.

2. உணவிலுள்ள குளுக்கோசை அல்லது ஏனைய உணவிலிருந்து உருவாகும் குருதி குளுக்கோஸ் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தல்.

உதாரணம் - சிறுகுறிஞ்சா இலைப் பவுடர்.

நீரிழிவு நோயாளர்கள் மென்பானம், இனிப்பான கோப்பி, தேனீர் போன்ற பானங்களைப் பருகுவதால், குருதி குளுக்கோஸ் மட்டம் அதிகரிக்கும். இந்தப் பானங்களுக்குப் பதிலாக 2D Cola பருகினால் குருதியில் குளுக்கோஸ் மட்டம் குறைவடையும் 2D Cola வை அதிகம் பருகிப் பருகி குருதியில் குளுக்கோஸ் மட்டம் குறைந்து கட்டுப்பாட்டில் வரும்.

நாம் அன்றாட உணவு வகைகளில் - சோறு, பாண், பழம், உட்கொள்வதால் குருதிக்கோஸ் மட்டம் அதிகரிக்கும். நீரிழிவு நோயாளர்களில் இன்சுலின் திறம்படச் செயற்படாமையால் அல்லது குறைவாக இருப்பதால், இவர்களின் குருதி குளுக்கோஸ் மட்டம். மிகமிக அதிகமாக அதிகரிக்கும். இவ்வாறு அதிகரிக்கும் குருதி குளுக்கோஸ் மட்டத்தை குறைப்பதற்கு எமது நிறுவனம் சிறுகுறிஞ்சா இலைப்பவுடரை பெருமளவு விநியோகிக்கின்றது. சிறு குறிஞ்சா பவுடரை தினமும் உட்கொள்வதாலும், உணவு கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பதாலும் நீரிழிவு நோயாளர்கள் குருதி குளுக்கோஸ் மட்டத்தைப் 10 நாட்களில் கட்டுப்பாட்டில் கொண்டு வரமுடியும். அத்துடன், குருதி கொலஸ்ரோல், ரைக்கிளிசைரைட் என்பனவும் குறைவதால் இருதய நோய், குருதி அழுத்தம் போன்ற நோய்களிலிருந்தும் நிவாரணம் பெறமுடியும்.

Bio Tec நீரிழிவு நோயாளர்களுக்கான குருதி குளுக்கோஸ் மட்டத்தை அதிகரிக்காத மென்பானமாக 2D Cola வையும், உணவினால் ஏற்படும் குருதி குளுக்கோஸ் மட்டம் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த சிறு குறிஞ்சா இலைப்பவுடரையும் தயாரித்து விநியோகிக்கின்றது.

**மேலதிக விபரங்களுக்கு**

021 - 4590907, 021-4570912, 0112852269 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது 131/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும்.

**இணையத்தள முகவரி -**
WWW.Biotec lanka . com

# சமூகமட்டத்தில் வேலையின்மையும், அதற்கான அடிப்படைக் காரணிகளும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அட்டவணை 07 ஊடாக வயது, அல்லது கல்வி மட்ட நிலைகளில் தங்கிவாழ்வோர் தன்மையை அவதானிக்க முடிகிறது. பட்டப்படிப்பும், அதற்கு மேல் பூர்த்தி செய்தவர்கள் 73.9% ஆனவர்கள் முழுமையாகதத் தங்கி இருப்பதையும், பாடசாலை செல்பவர்கள் 47.4 பேர் தங்கி வாழ்வதையும் ஒப்பீடு செய்து பார்க்க முடிகிறது. இதனை கருத்திற் கொண்டு, இளைஞர்கள் செயற்றிறனுடன் முயற்சியாண்மை செய்வது அவசியமாகிறது.

**வேலைவாய்ப்பை அதிகரிக்கும் செயல்நிலைகள்**

வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல் அரச கடமையாகும். கடந்த காலத்தைப் பொறுத்தமட்டில், வேலைவாய்ப்பு சந்தர்ப்பம் மிகமிகக் குறைவாகவே இடம் பெற்றுவருகின்றது. படித்த மற்றும் வேலையுலகின் உள்ளவர்களுக்கான பல்வேறு செயற்திட்டங்கள் எமது பிரதேச ரீதியிலும், நாடளாவிய ரீதியிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனலாம். வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதில் அண்மைய காலத்தில் அரசசார்பற்ற அமைப்புக்களின் பங்கும், தனி யார் நிறுவனங்களின் பங்கும் அளப்பரியது எனலாம்.

- இலங்கை மன்றக் கல்லூரியின் 'இலங்கைக்கான ஒரு நோக்கு' என்றதிட்ட அறிக்கையானது - இளைஞர்கள் வேலையுலகு மீதான அக்கறைத் தன்மையை ஏற்படுத்தவும், வேலைவாய்ப்புத் தொடர்பான சந்தர்ப்பத்தை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.
- பெற்றோர் கருத்தை மாணவர்கள் மதித்து அதற்கு ஏற்ப ஒழுங்குதல் அவசியம்.
- சமூக கலை கலாசார விழுமிய நிலைக்கு அப்பாற்பட்டு நின்று எடுத்த பொறுப்புக்களையும், கடமையையும் வேலைவாய்ப்பு ஊடாக செய்தல் மிகவம் முக்கியம். மேற்கூறப்பட்ட காரணிகளுக்கு அப்பாற்பட்டு செயற்பட தயாராகுதல் முக்கியமாகிறது.
- தனியார் துறை வேலைவாய்ப்பு முக்கியத்துவத்தை விரிவடையச் செய்தல் அவசியமாகிறது. இதற்கு தென்பகுதியில் 'இளம் முயற்சியாளர் ஸ்ரீலங்கா' என்ற செயற்திட்டமும் நல்ல எடுத்துக்காட்டு. இது Junior achievement என்ற சர்வதேச திட்டத்தை ஒத்ததாகும். இந்தத் திட்ட நடைமுறைகள் ஊடாக தனியார் துறை முயற்சியாண்மை வலுப்பெற சார்பாகவுள்ளது.

**ப.இராஜேஸ்வரன் (ஆசிரியர்)** (தொடரும்...)

# எமது தேச விடுதலைப் போராட்டத்தோடு இசையையும் இணைத்துச் செல்கிறோம்

## தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன்



கிளிநொச்சி—

மனித வாழ்வின் இடைவெளி, வெறுமை என்பவற்றை இசையே நிரப்புகிறது என தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போராளி இரா. செங்கதிரின் இசை நெறியாள்கைளில் உருவான 'வேரில் விழுந்த மழை' இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் மதிப்பீட்டுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்-

காற்றற்ற உலகத்தில் வாழ முடியாதது போல, இசையில்லாத உலகத்திலும் வாழமுடியாது. இசையைத் தேடி நாம் அலைந்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால், இந்த உலகம் இசைவற்றும், இணைக்கமற்றும் சென்று கொண்டிருப்பதால் - இசையினுடைய வலுவும், பெறுமதியும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

மேலைத்தேய நாடுகளிலே இசையினுடைய வலுவென்பது அளவிடமுடியாத ஒரு வலுவாக மாறிவருகிறது. அந்த வகையில் இந்த இறுவெட்டு ஒரு காலத்தின் தேவையாக வெளிவந்துள்ளது.

எம்மைப் பொறுத்த வரையில் இசை தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இருந்தபோதிலும், தற்போதுள்ள சூழலைக் கருத்தில் கொண்டு அடக்கி வாசிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

அண்மையில் வைரமுத்துவின் கவிதையொன்றைப் பார்க்க முடிந்தது. அந்தக் கவிதையில் கூறப்பட்டுள்ளது போல, இசை வெறுமையை நிரப்புவதாக கூறுகிறார்.

எங்களுடைய வாழ்க்கையின் இடைவெளி, வெறுமை என்பவற்றை இசைதான் நிரப்புகிறது. இறுகிய எம்மை செங்கதிரின் இறுவெட்டு குழையவைக்கிறது.

இசையைத் தேசியம் இணைந்த எமது விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச் செல்லுவதற்குப் பயன்படுத்துகிறோம். இந்த இறுவெட்டு என்பது நினைவுத் துயரை மீட்பதாக உள்ளது.

இலக்கிய இசைசார்ந்த பாங்காக இந்த இறுவெட்டு உள்ளது. இறுவெட்டின் தலைப்புக் கூட வேரில்விழுந்த மழையென அமைந்துள்ளது. அது வேரில் வீழ் மழையென அமைந்திருக்க வேண்டுமெனக் கருதுகிறேன்.

தியாகி திலீபனின் அதியுச்ச தியாகத்தை, ஈகத்தை வெளிப்படுத்துவதாக இந்த இறுவெட்டு அற் நமான பாடல்களைத் தாங்கி வெளிவந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் விசுவமடுவில் சனசமூக நிலையம் திறந்து வைப்பு



விசுவமடு—

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் விசுவமடு மத்திய சனசமூக நிலையக் கட்டடத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை இரு மாவீரர்களின் தந்தையான கதிரவேலு, சிறுவர் பாதுகாப்பு நிதியத்தை சேர்ந்த சுதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் அருண் ஏற்றிவைத்தார்.

ஆசியுரையை அதிசய விநாயகப் பெருமான் ஆலய ரகுநாதக் குருக்கள், தருமபுர பங்குத் தந்தை அருட்திரு ஜெயராஜ் அடிகள் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறுவர்களுக்கான கணினி கட்டடத்தைச் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மாவட்டப் பணிப்பாளர் அலெக்ஸ்சாண்டர் திறந்து வைத்தார். சிறுவர்களுக்கான வாசிப்பு நூலகத்தை கலாநிதி சோமஸ்கந்தன் திறந்து வைத்தார். நினைவு மரத்தை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த லாஸ் நாட்டிவைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை கலாநிதி சோமஸ்கந்தன், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தை சேர்ந்த அலைக்சாண்டர், லாஸ் ஆகியோர் நிகழ்த்தினர். சிறுவர் பாதுகாப்பு நாளையொட்டி நடைபெற்றகட்டுரைப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# கலைபண்பாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் 'வேரில் விழுந்த மழை' இறுவெட்டு வெளியீடு



கிளிநொச்சி—

கலைபண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் - புலிகளின் குரல் நிறுவனத்தின் அனுசரணையுடன் விடியல் இசைக்குழுவினரின் தயாரிப்பில் உருவான இரா.செங்கதிரின் - 'வேரில் விழுந்த மழை' இறுவெட்டு வெளியீடு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றி வைத்தார். தொடர்ந்து மங்கள விளக்கை புகைப்பட பிரிவுப் பொறுப்பாளர் செந்தோழன் ஏற்றினார்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை புலிகளின் குரல் அறிவிப்பாளர் திருமாறன் நிகழ்த்தினார். புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் தலைமையுரை நிகழ்த்தினார். இறுவெட்டின் முதற்பிரதியை இரா.செங்கதிர் வெளியிட்டு வைக்க கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் கலைவாணன் பெற்றுக் கொண்டார்.

அடுத்ததாக சிறப்பு பிரதிகளை கலைவாணன் வழங்கி வைத்தார்.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெற்றது. இறுவெட்டுக்கான மதிப்பீட்டை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன், புலிகளின் குரல் நிகழ்ச்சித்தயாரிப்பாளர் ஆதிலக்சுமிசிவகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். பதிலுரையை செங்கதிர் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பெருமளவிலான பொதுமக்கள், போராளிகள் கலந்து கொண்டனர்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஒக்ரோபர் - 27

*1492:* கியூபா -கொலம்பஸினால் கண்டுபிடிக்கப்பட்டது.

*1854:* சிறுவர் படையணி என்னும் அமைப்பை உருவாக்கிய சேர் வில்லியம் ஸ்மித் மரணமடைந்தார்.

*1904:* நியூஜோர்க் நகரில் சுரங்கப் புகையிரதப் பாதையின் முதலாவது கட்டடப் பணி முடிவடைய அது போக்குவரத்துக்காக திறந்துவிடப்பட்டது.

*: ரஷ்யாவும் ஜேர்மனியும் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தன.

*1912:* நியூஜோர்க்கில் பெண்களுக்கு வாக்குரிமையளிக்கக் கோரி 20000 மேற்பட்ட பெண்கள் வாக்குரிமை அணிவகுப்பு ஒன்றை நடத்தினர்.

*1918:* என் மக்கள் தொடர்ந்தும் போரை நடத்த விரும்பவில்லை அதற்கான திறனுமில்லை. எனவே போரை உடனே நிறுத்தவும், சமாதாப் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும் நேச நாடுகளிடம் கேட்கப் போகின்றேன் என ஆஸ்திரியா சக்கரவர்த்தி சார்ள்ஸ் - ஜேர்மனியின் அதிபர் கெய்சருக்கு தந்தி அனுப்பினார். தொடர்ந்து ஜேர்மனியும் போர் நிறுத்த வேண்டுகோள் விடுத்தது. (1914 தொடக்கம் 1918 வரை நடைபெற்ற முதலாம் உலகப் போரில் 8500 000 பேர் பலியாகினர்.)

*1920:* சர்வதேச சங்கத்தின் தலைமையகம் ஜெனிவாவில் அமைக்கப்பட்டது.

*1922:* ஆட்சியை என்னிடம் கொடு அல்லது நாங்களே கைப்பற்றிக் கொள்வோம் என்ற முஸோலினியின் மிரட்டலுக்குப் பயந்து இத்தாலியில் லூகிபாட்டாவின் அமைச்சரவை பதவி விலகியது.

*1927:* உலகின் முதலாவது பேசும் செய்திப் படமான ஃபாக்ஸ் மூவிடோன் நியூஸ் நியூஜோர்க்கில் ராக்ஸி திரையரங்கில் திரையிடப்பட்டது.

*1941:* அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கடற்படை தின வானொலி ஒலிபரப்பின் போது அமெரிக்கா மீது தாக்குதல் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன. குண்டுகள் முழக்கமிடத் தொடங்கிவிட்டன என்று உரையாற்றி அமெரிக்கர்களை இரண்டாம் உலகப் போருக்கு தயார்படுத்தினார்.

*1947:* இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்ததற்கான ஒப்பந்தப் பத்திரத்தில் - காஸ்மீர் மகாராசாவும், ஹரிசிங்கும் ஒப்பமிட்டனர். இந்திய அரச படையணி காஸ்மீர் சென்றடைந்தது.

*1951:* எகிப்து -பிரிட்டனுடன் சூடான் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக 1899 இல் செய்து கொண்ட ஒப்பந்தம் மற்றும் சூயஸ்கால்வாய் பகுதியில் பிரிட்டிஸ் படை இருப்பதற்காக 1936 இல் செய்து கொண்ட ஒப்பந்தம் ஆகிய இரு ஒப்பந்தங்களையும் முறித்துக் கொள்வதாக அறிவித்தது.

*1958:* பாகிஸ்தானின் ஜெரைல் மொகம்மது அயூப்கானின் வற்புறுத்தல் காரணமாக ஜனாதிபதி இஸ்தந்தர் மீர்ஸா பதவி விலகினார்.

*1969:* இந்தியாவில் சண்டிகரை பஞ்சாப் மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்று கோரி 74 நாள்களாக உண்ணா விரதம் இருந்த தர்ஷன் சிங் பெருமான் மரணமானார்.

*1971:* கொங்கோ குடியரசு தனது பெயரை ஸெய்ரோ குடியரசு என்று மாற்றிக் கொண்டது.

*1978:* உகண்டா சர்வாதிகாரி இடி அமீனின் விமானப்படை, தான் ஷானியாவில் புகோபா நகர் மீதும் விக்டோரியா ஏரி மீதும் குண்டு வீசித் தாக்க ஆரம்பித்தது.

*1983:* கிரனேடா மீது அமெரிக்கா படையெடுத்ததைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் நிறைவேற்றியது. எனினும், அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை ரத்துச் செய்துவிட்டது.

*1995:* ஐரோப்பிய ஒன்றியத்தின் யூரோ நாணயத்திட்டத்துக்கு ஜேர்மனியும், பிரான்சும் ஒப்புக் கொண்டன.

தொகுப்பு~ சந்துரு

# தலை மன்னார் கடற்பரப்பினூடாக போதைப்பொருள் கடத்தல் அதிகரிப்பு

மன்னார்—

தலைமன்னார் கடற்பரப்பினூடாக போதைப் பொருள் கடத்தப்படும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஒரு மாத காலத்துக்குள் 11 கிலோ கிராம் நிறையுள்ள ஹெரோயின் போதைப் பொருள் இந்தப் பகுதியினுடாக கடத்தி வரப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

போதைப்பொருள் வணிகத்தில் ஈடுபடுபவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவது போன்றே இதனை மேற்கொண்டு வருகின்றனர். இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்தே இப்போதைப் பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன. போதைப் பொருட்கள் இலங்கைக்கு கடத்தி வருவதைத் தடுப்பதற்காக மன்னார் கடற்பர்ப்பில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என கரையோர பாதுகாப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# துவிச்சக்கரவண்டி வழங்கல்

முல்லைத்தீவு அகதிகள் புனர் வாழ்வு கழகம் மற்றும் பொருண்மிய மதியுரையகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஐ.ஒ.எம்.நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் 20 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அண்மையில் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் ரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

பேச்சு வரம் எல்லோருக்கும் உண்டு. சிந்திக்கும் வரம் சிலருக்கே தரப்பட்டுள்ளது.

- கேட்டோ -

## நமது நோக்கு

### புலம்பெயர் தமிழரின் எழுச்சிக் குரலுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பதில் என்ன?

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது நியாயமற்ற முறையிலும், சிங்களப்பேரினவாத சக்திகளுக்கு பெரும் உற்சாகமூட்டி, தமிழ் மக்களுக்கு எதிரான அவர்களின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை மேலும் தீவிரமாக்கும் வகையிலும், ஐரோப்பிய ஒனறியமானது தனது அங்கத்துவ நாடுகளுக்கான அரசியல் ரீதியிலான பயணங்களை மேற்கொள்ள விதித்த தடையினை நீக்குமாறும், தமிழ் மக்களின் நியாயபூர்வமான விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறும் கோரிக்கை விடுக்கும் முகமாக பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிரஷெல்ஸில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகம் முன அணிதிரண்ட புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்ட உரிமை முழக்கமானது- சர்வதேச சமூகத்திற்கு, குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளுக்கு சில செய்திகளை மிக அழுததமாகவும், தெளிவாகவும் உணர்த்தியிருக்குமென்றே தோன்றுகிறது.

இந்த 'எழுக தமிழ' எழுச்சிப் பேரணியை நடக்கவிடாமல் தடுப்பதற்கு தமிழின விரோத - தமிழ்த் தேசிய விரோத சக்திகளுக்குப் பின்னால் நின்று உருவேற்றிய புறசக்திகள், அவர்களுக்கு கலையேற்றி, மேள்கொள்ளவைத்த செயற்பாடுகள் யாவும் தோல்வியடைந்த நிலையில் அந்த நிகழ்வானது புலம்பெயர்வாழ் தமிழ் மக்களின் உள்ளக் குமுறலை, பொங்கு தமிழ் உணர்வெழுச்சியை, தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ்த் தேசிய தலைமை மீதான பற்றுறுதியுடன் கூடிய நம்பிக்கையை உலகிற்கு மிக அழுத்தமாக உணர்த்துவதாக அமைந்த ஒரு வரலாற்றுப் பதிவைச் செய்துள்ளது.

இது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், தமிழ்த் தேசியத்திற்கும், தாயக விடுதலைப் போராட்டத்திற்கும் மற்றும் சமாதான முயற்சிகளுக்கும் எதிரான அனைத்து உள்ளக - வெளயக சக்திகளுக்கும் அதிர்ச்சியையும், அவமானத்தையும் ஏற்படுத்தும் வகையிலான ஒரு பாடத்தைப் படிப்பித்துள்ளது என்றால் மிகையில்லை.

இந்த தமிழ் எழுச்சிப் பேரணிக்கு தடைவிதிக்குமாறும், இது உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக அவர்களின் ஆதரவாளர்களே நடத்தும் பேரணியெனவும், விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் படுகொலைகளை மேற்கொண்டுவருவதாகவும், சிறுவர்களை யுத்தத்தில இணைத்து வருவதாகவும், மனித உரிமை மீறல் செயற்பாடுகளை தொடர்ந்து வருவதாகவும், ஏற்கனவே தமிழ் மக்களால் கடந்த தேர்தலில் முழுமையாக நிராகரிக்கப்பட்ட நிலையில், பேரினவாத - தமிழின விரோத சக்திகளின் நிழலில் இருந்து அடிமைத்தன அரசியல் பிழைப்பினைத் தொடர்ந்துவருகின்ற ஆனந்தசங்கரியார்- ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் அனைத்துத் தலைவர்களுக்கும் தனித்தனியாக வேண்டுகோள்விடுத்தும், அவர்கள் அவரது வேண்டுகோளை அக்கறையுடன் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

ஆனந்தசங்கரியாரின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஒன்றும் புதிதானவையோ, புதினமானவைகளோ அல்ல... இவையனைத்தும் விடுதலைப்புலிகள் குறித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான அனைத்து சக்திகளும் தம் சொந்த ஆத்மதிருப்திக்காக காலம்காலமாக புலம்பிவருகின்றவையேயாகும்.

2002இல் நோர்வே அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டையடுத்து உருவான சமாதான காலத்தில், சர்வதேச சமூகத்திற்கும், சிறப்பாக மேற்குலகம் மற்றும் ஐரோப்பிய சமூகத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேரடித்தொடர்புகள், பல்துறை சார்ந்த விடயங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் - கருத்துப்பகிர்வுகள், மற்றும் உடன்பாடுகளையடுத்து இத்தகைய மேற்குறித்த புலம்பல்கள் யாவும் பொய்மைத் தன்மை கொண்டவை என்பது அவர்களால் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய விடயமாகிவிட்டது.

எனினும், இலங்கைப் பிரச்சினையென்பது தேசிய விவகாரம் என்ற கட்டத்தைத் தாண்டி, அயலக - மற்றும் சர்வதேச மேலாதிக்க சக்திகளின் சுயஅரசியல் இராணுவ அபிலாஷைகளை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் எட்ட முயலும் ஆதிக்கப் போட்டியில் இலங்கையின் கேந்திரத்தன்மை மீதான தமது பிடியினை இறுக்கிக்கொள்ள ஒரு கருவியாகப் பயன்படுத்தும் அவர்களின் அணுகுமுறைகளுக்குள் சிக்க நேர்ந்ததன் விளைவே இன்றைய அனர்த்தங்களுக்கெல்லாம் காரணம்.

இதற்கு மிகவும் பலவீனமானதும், தொலைநோக்குச் சிந்தனைத் திறனற்றதுமான இலங்கை அரசியல் தலைமைகளின் வெறும் பதவிநோக்கிலான, தேசிய நலனைப் புறக்கணித்த, பேரினவாத உணர்வுடன் கூடிய செயற்பாடுகளே காரணம்.

இந்தப் பலவீனத்திலிருந்து பலத்திற்கு மீளுதல் என்பது சாத்தியமற்றதாகிவிட்ட இன்றைய நிலையில், மேற்குலகோ, ஐரோப்பிய ஒன்றியமோ ஏன் அயலக தேசமோ கூட தமது 'தேவையின்' 'நலனின்' அடிப்படையிலேயே இலங்கைப் பிரச்சினையில் தமது தலையீடுகளை மேற்கொள்ளும் என்ற யதார்த்தத்தை சங்கரியார் போன்றவர்கள் புரிந்துகொள்ளாதது அவர்களின் அரசியல் அறிவின் மந்த நிலையை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமோ... ஏனைய தொலைநோக்குப் பார்வை கொண்ட சர்வதேச நாடுகளோ, தமிழர் பிரச்சினையின் நியாயத்தன்மையைப் புரிந்து கொண்டுள்ளமையாலேயே சமாதானப் பேச்சுக்களை - அதுவும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுதல் சங்கரியார் போன்றவர்களுக்கு அவசியமாகும்.

புலம்பெயர் தமிழரின் ஐரோப்பிய ஒன்றிய தலைமையகம் முன்னரான எழுச்சிப்பேரணியும், உணர்ச்சிக் குரலும், அதன் தலைவர்களுக்கு சில உறுதியான செய்திகளை உணர்த்தியே இருக்கும்.

பேரணியின் இலக்கும் அதுவேயாகும்.

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்




'ஹர்சுற்றி'யார் பார்வையில்...

# பயன்தரும் கருவிகளால் நாம் வீணே பலிகொடுக்க வேண்டுமா?

விஞ்ஞான வளர்ச்சியை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளப் பழகிக் கொண்டால் எல்லோருக்குமே நன்மை பயக்கும். தவறாகப் பயன்படுத்தினால் தனக்கு மட்டுமல்ல, பிறருக்கும் பாதகமே ஏற்படும் என்று சொல்லிக் கொண்டு வந்தார் நண்பர் பரமசிவம்.

ஏதோ போதனை சொல்லிக் கொண்டு வருகிறமாதிரித் தெரிகிறதே என்று கேட்டேன்.

இந்தக் கையடக்கத் தொலைபேசி என்றும் செல்லிடத் தொலைபேசி என்றும் சொல்லப்படும் தொலைபேசி எப்படியெல்லாம் சந்தர்ப்பங்களில் உதவுகிறது. மிக அவசரமாக அவசியமான செய்தியை வெகு தூரத்திலிருப்பவருக்கு வேறு வழிகளில் தகவல் தெரிவிக்க முடியாத இடத்திலிருப்பவருக்கு இக்கையடக்கத் தொலைபேசி மூலம் தெரிவிக்கவும், தொடர்பு கொள்ளவும் வழி செய்து விடுகிறது. ஆனால் இதை பலரும் குறிப்பாக சில இளசுகள் தவறாகப் பயன்படுத்தித் தமக்கும், பிறருக்கும் ஆபத்தையும் ஏற்படுத்தி விடுகிறார்கள் என்று பரமசிவம் சொன்னார்.

சமீபத்தில் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையொன்றின முதல் பக்கத்தில் பொலிஸ்காரர் ஒருவர் பொலிஸ் வாகனம் ஒன்றைச் செலுத்தியபடியே கைத்தொலைபேசியை ஒரு கையால் காதருகில் பிடித்தபடியே வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பதைப் படம் பிடித்துப் போட்டு காவல்துறையே இப்படிச் செய்கிறது என்று அடிக்குறிப்புப் போட்டிருந்தது. வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது என்பது சட்டம் என்பதையும் நினைவூட்டியிருந்தது என்று நான் சொன்னேன்.

சில தினங்களுக்கு முன்னர் கைதடி நாவற்குழியில் மோட்டார் வான் ஒன்று ஓட்டோ என்று சொல்லப்படும் முச்சக்கரவண்டியொன்றுடன் மோதியதில் ஓட்டோவிலிருந்த ஒரு இளம் குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே மாண்டுபோனார். அந்த வண்டியும் இரண்டாகப் பிளந்து போனது. அதிலிருந்த மற்றும் மூவரும் காயமடைந்தனர். இந்தக் கோரவிபத்துக்குக் காரணமும் கையடக்கத் தொலைபேசிதானாம். ஒரு இளம் பெண் மோட்டார் சைக்கிள் ஓட்டியபடியே கைத்தொலைபேசியில் பேசிக் கொண்டுவந்ததாகவும் இந்த மோட்டார் சைக்கிளில் மோதிவிடாமல் வான்காரர் தனது வாகனத்தை வெட்டித் திருப்பியபோது ஓட்டோவுடன் மோதி விபத்துச் சம்பவித்ததாகவும் கூறப்படுகிறது என்று பரமசிவம் சொன்னார்.

வீதியில் வாகனத்தில் பயணம் செய்யும்போது கைத் தொலைபேசியில் அழைப்பு வந்தால், வாகனத்தை ஓரமாக நிறுத்திப் பேசலாம் அல்லது வீதியில் செல்லும்போது கைத்தொலைபேசியை இயங்காமல் நிறுத்தி வைத்துவிட்டுப் பயணம் செய்யலாம் என்று நான் சொன்னேன்.

இப்படி இளசுகள் மட்டுமல்ல, வயது வந்தவர்களும் கூட கைத்தொலைபேசியை வாகனங்களில் பயணம் செய்யும்போதும் பயன்படுத்துகிறார்கள். இந்தப் பழக்கத்தை நிறுத்துவது அவசியம் என்று பரமசிவம் சொன்னார்.

இதுமட்டுமல்ல, தொலைக் காட்சியில் படம் தெளிவாகத் தெரியவில்லை என்பதற்காக அன்ரனாவைத் திருப்பியபோது- அதன் இரும்புக் குழாய் மின் கம்பியில் பட்டதால் இரண்டு பெண்கள் அநியாயமாகப் பலியாகியிருக்கின்றனர். விஞ்ஞானம் நமக்கு பல வசதிகளைத் தந்தாலும், நாம் கவனமாகக் கையாளாவிட்டால், நமக்கும் பிறருக்கும் ஆபத்தைத் தேடிவிடுகிறோம். இது மழைக்காலம். இடிமின்னலால் ஆபத்து ஏற்படலாம். தொலைக்காட்சி, வானொலி உபயோகிப்போர் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டுமென்று சொன்னேன்.

மக்களுக்கு எப்படி எச்சரிக்கை செய்தாலும் யாரும் அதற்குச் செவிமடுப்பதாகத் தெரியவில்லை. பட்டுத்தானா தெளியவேண்டும். படித்தறியக் கூடாதா என்று கேட்டபடி பரமசிவம் நடந்தார்.

## அதிபர் நியமனங்கள்

**வாசகர் நோக்கு**

பதில் கடமைபுரியும் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு பத்திரிகையில் செய்தி காணப்பட்டது. அதை வலியுறுத்தி வாசகர் ஒருவரால் கடிதம் ஒன்றும் எழுதப்பட்டிருந்தது.

அதிபர் பதவி என்பது ஒரு நாட்டின் நற்பிரஜைகளை, அதாவது சிறந்த மனித வளங்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைக்கு பொறுப்பான ஒரு முக்கிய பதவியாகும். அப்படிப்பட்ட ஒரு பதவிக்கு ஒருவரை நியமிக்கும்போது வெறுமனே கல்விச் சான்றிதழ்களை கவனத்தில் கொள்ளாது, அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரி, போட்டிப் பரீட்சை நடத்தி திறமை அடிப்படையில் தெரிவு செய்து நேர்முகப் பரீட்சையின் மூலம் அவரது ஆளுமைப் பண்புகளும் ஏனைய விடயங்களும் பரிசீலிக்கப்பட்டு அவரது சேவைக்காலத்தின் கடந்த காலச் செயற்பாடுகள், நடத்தைகள் ஆராயப்பட்டு இவை அனைத்தும் திருப்தி கொள்ளக்கூடிய வகையில் உள்ள ஒருவருக்கு நியமனம் வழங்குவதே நீதியான, நியாயமான எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மிகப் பொருத்தமான செயற்பாடாக அமையும்.

அவ்வாறு சரியான முறையில் ஒரு நியமனம் வழங்கப்படுமிடத்து, பாடசாலைகளில் அதிபர் - ஆசிரியர் உறவைச் சீராகப் பேணவும், பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையிலான உறவு மேம்படவும், அதனூடாக சிறந்த வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சிறந்த மாணவர்களை உருவாக்கவும் முடியும்.

பதில் அதிபர்களாக இருந்தார்கள் என்ற ஒரே நோக்கத்திற்காக கல்வி அமைச்சு இவர்களை அதிபர் சேவைக்குள் உள்வாங்குவதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

பதில் அதிபர் பதவிக்கு வருகின்றவர்களை போட்டிப்பரீட்சை இன்றி நிரந்தரமாக்கும் போது தகுதியான திறமையான எத்தனையோ ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் மேலும் இந்த வழிகளில் தான் அதிபர் பதவியை பெறமுடிகிறது என்றால் வருங்காலத்தில் ஏனையவர்களும் நியாயமற்ற வழிமுறைகளை அல்லவா தேட வேண்டி ஏற்படும். இது கல்விச் செயற்பாட்டில் ஒரு சுமுக நிலையை மேம்படுத்த உதவப் போவதில்லை.

எனவே அதிபர் பதவி மகத்தான, மதிப்புமிக்க பதவியாக விளங்கவேண்டுமாயின், 2005 செப்ரெம்பர் மாதம் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டதற்கு அமைய போட்டிப் பரீட்சை நடாத்தி நேர்முகப் பரீட்சை மூலம் ஆளுமை உள்ளவர்களைத் தெரிவு செய்து அதிபர்களாக நியமிப்பதே பாடசாலையின் வளர்ச்சிக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் உதவும்.

1999ஆம் ஆண்டிலும் இதே மாதிரி ஒரு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சை முடிவுகள் வெளிவர முன்னரே பதில் கடமை புரிந்த அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதன் ஊடாக பரீட்சையை அர்த்தமற்றதாக்கியது போன்று 2005 இலும் கோரப்பட்ட போட்டிப்பரீட்சை விண்ணப்பங்களை அர்த்தமற்றதான செயற்பாடாக மாற்றாது இருக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

*சாவகச்சேரி.* *க. கோவிந்தராசா*

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2005

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

(நேற்றைய தொடர்ச்சி....)

| | | |
|---|---|---|
| 38 | யா/உ/677 | திரு. சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் |
| 39 | யா/உ/685 | திரு. வல்லிபுரம் முருகையா |
| 40 | யா/உ/702 | திரு. மார்க்கண்டு பரமசாமி |
| 41 | யா/உ/710 | திரு. முருகேசு சிவராஜா |
| 42 | யா/உ/725 | திரு. சின்னத்தம்பி இராசரத்தினம் |
| 43 | யா/உ/740 | திரு. இராமநாதக்குருக்கள் சத்தியமூர்த்திக்குருக்கள் |
| 44 | யா/உ/752 | திரு. சொக்கலிங்கம் சின்னத்துரை |
| 45 | யா/உ/754 | திரு. வேலுப்பிள்ளை சண்முகராசா |
| 46 | யா/உ/800 | திரு. மாணிக்கம் தில்லையம்பலம் |
| 47 | யா/உ/801 | திருமதி. தங்கரத்தினம் கயிலாயபிள்ளை |
| 48 | யா/உ/814 | திரு. செல்லையா வேலாயுதபிள்ளை |
| 49 | யா/உ/818 | திரு. சுப்பையா வைத்திலிங்கம் |
| 50 | யா/உ/829 | திருமதி. சரோஜினிதேவி தம்பியையா |
| 51 | யா/உ/867 | திரு. சீனிவாசகம் கனகசுந்தரம் |
| 52 | யா/உ/884 | திரு. இராசா மயில்வாகனம் |
| 53 | யா/உ/900 | திரு. கணபதிப்பிள்ளை நவரட்ணம் |
| 54 | யா/உ/1016 | திரு. சோமசுந்தரம் சோமசேகரம் |
| 55 | யா/உ/1027 | திரு. கந்தையா அருமைத்துரை |
| 56 | யா/உ/1054 | திருமதி. சேதுப்பிள்ளை வரதராசா |
| 57 | யா/உ/1071 | திருமதி. ஐஸ்வரியம் செல்லத்துரை |
| 58 | யா/உ/1072 | திருமதி. பிலோமினா பிரான்சிஸ் |
| 59 | யா/உ/1073 | திரு. கணபதிப்பிள்ளை இராசையா |
| 60 | யா/உ/1074 | திருமதி. மகேஸ்வரி பீதாம்பரம் |
| 61 | யா/உ/1076 | திருமதி. பராசக்தி துரைராசா |
| 62 | யா/உ/1087 | திருமதி. சிவபாக்கியம் அன்னலிங்கம் |
| 63 | யா/உ/1111 | திரு. அப்பாக்குட்டி குலசிங்கம் |
| 64 | யா/உ/1123 | திருமதி. செல்லம்மா மாரிமுத்து |
| 65 | யா/உ/1161 | திருமதி. சிவக்கொழுந்து இராசநாதன் |
| 66 | யா/உ/1210 | திருமதி. கிறேஸ்செல்வராணி நவரத்தினம் |
| 67 | யா/உ/1219 | திருமதி. கில்டா செல்வராணி சிவசவுந்தரநாயகம் |
| 68 | யா/உ/1240 | திருமதி. சின்னாச்சிப்பிள்ளை துரைராசா |
| 69 | யா/உ/1244 | திரு. அப்புத்துரை வேலாயுதம் |
| 70 | யா/உ/1257 | திரு. இராஜசிங்கம் கணேசதாஸ் |
| 71 | யா/உ/1283 | திரு. பெரியா செல்லத்துரை |
| 72 | யா/உ/1322 | திரு. பழனி நவரத்தினம் |
| 73 | யா/உ/1331 | திரு. பேரம்பலம் பத்மநாதன் |
| 74 | யா/உ/1341 | திரு. கணபதி சீனிவாசகம் |
| 75 | யா/உ/1423 | திரு. நல்லதம்பி நடராசா |
| 76 | யா/உ/1515 | திரு. சுப்பிரமணியம் செல்வரத்தினம் |
| 77 | யா/உ/1518 | திருமதி. சற்குணம் சிவலிங்கம் |
| 78 | யா/உ/1546 | திருமதி. தெய்வானை சுப்பிரமணியம் |
| 79 | யா/உ/1559 | திரு. சிவக்கொழுந்து அருட்பிரகாசம் |
| 80 | யா/உ/1591 | திருமதி. கமலாதேவி சிவபாதசுந்தரம் |
| 81 | யா/உ/1593 | திரு. நன்னித்தம்பி குமாரசாமி |
| 82 | யா/உ/1603 | திருமதி. செல்வரத்தினம் மாசிலாமணி |
| 83 | யா/உ/1615 | திரு. முத்துத்தம்பி பஞ்சநாதன் |
| 84 | யா/உ/1628 | திரு. கந்தையா இராசையா |
| 85 | யா/உ/1639 | திரு. பொன்னையா சிவசுப்பிரமணியம் |
| 86 | யா/உ/1662 | திரு. சரவணமுத்து செல்வரத்தினம் |
| 87 | யா/உ/1678 | திரு. இராசலிங்கம் திருச்சிற்றம்பலம் |
| 88 | யா/உ/1710 | திரு. சின்னத்துரை ஞானசூரியர் |
| 89 | யா/உ/1726 | திரு. அப்பாத்துரை கனகசபை |
| 90 | யா/உ/1739 | திரு. வயிரவப்பிள்ளை முருகையா |
| 91 | யா/உ/1744 | திரு. தம்பியையா நேசரத்தினம் |
| 92 | யா/உ/1760 | திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம் |
| 93 | யா/உ/1763 | திரு. தம்பிராசா இராசரத்தினம் |
| 94 | யா/உ/1788 | திருமதி. செல்வரத்தினம் நாகநாதர் |
| 95 | யா/உ/1797 | திரு. சுப்பிரமணியம் செல்லப்பா |
| 96 | யா/உ/1802 | திரு. முதலித்தம்பி சிவபாதம் |
| 97 | யா/உ/1809 | திரு. சீனியப்பா செல்வரட்ணம் |
| 98 | யா/உ/1820 | திருமதி. இரத்தினேஸ்வரி தம்பிராசா |
| 99 | யா/உ/1829 | திரு. சின்னப்பு விசுவலிங்கம் |
| 100 | யா/உ/1839 | திருமதி. அன்புமலர் இராசரத்தினம் |
| 101 | யா/உ/1847 | செல்வன். பாலநாயகம் சிவரூபன் |
| 102 | யா/உ/1858 | திருமதி. நாகேஸ்வரி கணேஸ் |
| 103 | யா/உ/1867 | திரு. கனகசபை ஜெயநாதன் |
| 104 | யா/உ/1881 | திரு. நாகலிங்கம் கணேசபிள்ளை |
| 105 | யா/உ/1887 | திரு. செல்லப்பா கனகசபாபதி |
| 106 | யா/உ/1888 | திரு. சோமசுந்தரம் குலேந்திரன். |
| 107 | யா/உ/1905 | திருமதி. மகேஸ்வரிஅம்மா நடராசா |
| 108 | யா/உ/1935 | திரு. குமாரசாமிக்குருக்கள் பரமசிவக்குருக்கள் |
| 109 | யா/உ/1946 | திரு. மாணிக்கர் பரஞ்சோதி |
| 110 | யா/உ/1953 | திரு. சரவணமுத்து பூபாலசிங்கம் |
| 111 | யா/உ/1965 | திரு. ஐயாத்துரை இராசரத்தினம் |
| 112 | யா/உ/1968 | திரு. கந்தையா இராசதுரை |
| 113 | யா/உ/1972 | திரு. சுப்பையா இராசரத்தினம் |
| 114 | யா/உ/1993 | திருமதி. சுவத்திரை கந்தசாமி |
| 115 | யா/உ/2019 | திரு. கந்தையா செல்லத்துரை |
| 116 | யா/உ/2026 | திரு. பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம் |
| 117 | யா/உ/2057 | திரு. சின்னத்தம்பி திருநாவுக்கரசு |
| 118 | யா/உ/2073 | திரு. தர்மலிங்கம் வீரசிங்கம் |
| 119 | யா/உ/2075 | திரு. மாணிக்கம் வேலாயுதபிள்ளை |
| 120 | யா/உ/2096 | திருமதி. அன்னலட்சுமி விசுவலிங்கம் |
| 121 | யா/உ/2148 | திரு. இளையதம்பி நாகேந்திரன் |
| 122 | யா/உ/2234 | திருமதி. தனலட்சுமி சின்னத்துரை |
| 123 | யா/உ/2300 | திரு. சிவசுப்பிரமணியகுருக்கள் சோமசுந்தரசர்மா |
| 124 | யா/உ/2305 | திருமதி. குணமணி நடேசு |
| 125 | யா/உ/2306 | திரு. இளையப்பா கிருஷ்ணன் |
| 126 | யா/உ/2329 | திரு. கந்தையா சின்னத்துரை |
| 127 | யா/உ/2356 | திருமதி. மனோன்மணி அருளம்பலம் |
| 128 | யா/உ/2372 | திருமதி. இராசம்மா சுப்பிரமணியம் |
| 129 | யா/உ/2374 | திரு. நாகமணி தம்பித்துரை |
| 130 | யா/உ/2387 | திரு. மாதர் குண்டுமணி |
| 131 | யா/உ/2395 | திரு. சிவசம்பு நவரத்தினம் |
| 132 | யா/உ/2396 | திரு. சதாசிவம் நாகலிங்கம் |
| 133 | யா/உ/2402 | திருமதி. ஞானேஸ்வரி காசிராசா |
| 134 | யா/உ/2405 | திருமதி. சிவபாய்க்கியம் நரசிங்கம் |
| 135 | யா/உ/2429 | திரு. இராசதுரை இராசலிங்கம் |
| 136 | யா/உ/2433 | திருமதி. சந்திரவதனா இராசையா |
| 137 | யா/உ/2437 | திரு. வேலுப்பிள்ளை தங்கவடிவேல் |
| 138 | யா/உ/2474 | திரு. கந்தையா தியாகராசா |
| 139 | யா/உ/2476 | திரு. வேலன் மார்க்கண்டு |
| 140 | யா/உ/2482 | திருமதி. மனோன்மணி துரைராசா |
| 141 | யா/உ/2499 | திருமதி. றோஸ்மாக்கிரட் அன்றெனிரட்ணம் |
| 142 | யா/உ/2508 | திருமதி. தேவமணி ஆனந்தராசா |
| 143 | யா/உ/2534 | திரு. மாரிமுத்து இரத்தினம் |
| 144 | யா/உ/2585 | திருமதி. யோகேஸ்வரி பஞ்சாட்சரம் |
| 145 | யா/உ/2617 | திருமதி. பத்மலோசினி குணசிங்கம் |
| 146 | யா/உ/2619 | திரு. மூத்ததம்பி பாலசிங்கம் |
| 147 | யா/உ/2624 | திருமதி. கனகசபாபதி பரமேஸ்வரி |
| 148 | யா/உ/2628 | திரு. சின்னத்தம்பி திருநாவுக்கரசு |
| 149 | யா/உ/2651 | திரு. நாகமணி இரத்தினவேல் |
| 150 | யா/உ/2661 | திருமதி. அமராவதி மயில்வாகனம் |
| 151 | யா/உ/2665 | திரு. இளையதம்பி தர்மலிங்கம் |
| 152 | யா/உ/2674 | திரு. நாகமுத்து சுந்தரலிங்கம் |
| 153 | யா/உ/2679 | திருமதி. மீனாட்சி நடராசா |
| 154 | யா/உ/2681 | திரு. ஆறுமுகம் சிவலிங்கம் |
| 155 | யா/உ/2707 | திரு. வேலுப்பிள்ளை முத்துலிங்கம் |
| 156 | யா/உ/2716 | திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம் |
| 157 | யா/உ/2740 | திரு. சபாரத்தினசர்மா போஜராஜன் |
| 158 | யா/உ/2771 | திரு. முத்துத்தம்பி செல்வஸ்தன் |
| 159 | யா/உ/2809 | திருமதி. பரமேஸ்வரி |
| 160 | யா/உ/2839 | திரு. வீரசிங்கம் குணரத்தினம் |
| 161 | யா/உ/2862 | திரு. ஏகாம்பரம் செல்வராசா |
| 162 | யா/உ/2875 | திரு. சின்னட்டி தருமலிங்கம் |
| 163 | யா/உ/2878 | திரு. சுப்பிரமணியம் பற்குணராசா |
| 164 | யா/உ/2944 | திரு. சின்னத்தம்பி நாகராசா |
| 165 | யா/உ/2950 | திரு. சின்னத்தம்பி உமாபதி |
| 166 | யா/உ/2980 | திரு. சின்னத்தம்பி கந்தசாமி |
| 167 | யா/உ/3008 | திரு. காத்தி யோசேப்பு |
| 168 | யா/உ/3024 | திரு. குலசிங்கம் உதயராஜ் |
| 169 | யா/உ/3042 | திரு. தம்பையா மயில்வாகனம் |
| 170 | யா/உ/3054 | திருமதி. சத்தியபாமா சரசானந்தராசா |
| 171 | யா/உ/3068 | திருமதி. புஸ்பலீலா சண்முகநாதன் |
| 172 | யா/உ/3082 | திரு. மயில்வாகனம் மகேசன் |
| 173 | யா/உ/3098 | திருமதி. திரவியம் அரியரத்தினம் |
| 174 | யா/உ/3124 | திரு. செல்லையா தியாகராஜா |
| 175 | யா/உ/3137 | திரு. நடேசு இரட்ணம் சின்னராசா |
| 176 | யா/உ/3141 | திரு. சின்னத்தம்பி சவுந்தரநாயகம் |
| 177 | யா/உ/3143 | திருமதி. மனோரஞ்சிதம் பொன்னுத்துரை |
| 178 | யா/உ/3156 | திரு. தில்லையர் குலவீரசிங்கம் |
| 179 | யா/உ/3190 | திரு. செல்லர் நடராஜா |
| 180 | யா/உ/3210 | திரு. முருகேசு ஜீவகாந்தி |
| 181 | யா/உ/3280 | திரு. கந்தர் நவரத்தினம் |
| 182 | யா/உ/3299 | திருமதி. தங்கச்சியம்மா தம்பிஐயா |
| 183 | யா/உ/3308 | திரு. வைத்திலிங்கம் புவனேந்திரன் |
| 184 | யா/உ/3324 | திருமதி. புவனேஸ்வரி குணரத்தினம் |
| 185 | யா/உ/3325 | திருமதி. சின்னத்தங்கச்சி செல்லையா |
| 186 | யா/உ/3391 | செல்வி. ஜெனிஸ்டா தேவபாலன் |
| 187 | யா/உ/3412 | திருமதி. யோகேஸ்வரி இரத்தினசிங்கம் |
| 188 | யா/உ/3417 | திருமதி. பவளம் தம்பையா |
| 189 | யா/உ/3428 | திருமதி. புஸ்பராணி தங்கத்துரை |
| 190 | யா/உ/3458 | திருமதி. மரியம்மா செபஸ்ரியாம்பிள்ளை |
| 191 | யா/உ/3459 | திருமதி. இளையபிள்ளை கந்தையா |
| 192 | யா/உ/3460 | திருமதி. இராசம்மா கந்தசாமி |
| 193 | யா/உ/3467 | திருமதி. அரியம்மா பொன்னையா |
| 194 | யா/உ/3472 | திருமதி. பாக்கியம் பெர்னான்டோ |
| 195 | யா/உ/3484 | திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை |
| 196 | யா/உ/3527 | திருமதி. மகேஸ்வரி இரத்தினசபாபதி |
| 197 | யா/உ/3531 | திருமதி. கனகம்மா செல்லத்துரை |
| 198 | யா/உ/3556 | திரு. செல்லத்துரை விருத்தாசலம் |
| 199 | யா/உ/3558 | திருமதி. சுபத்திராதேவி இரத்தினசபாபதி |
| 200 | யா/உ/3577 | திருமதி. புவனேஸ்வரி சிவகுருநாதன் |
| 201 | யா/உ/3581 | திரு. செல்லப்பா நாகராசா |
| 202 | யா/உ/3634 | திரு. வயிரவப்பிள்ளை இராசதுரை |
| 203 | யா/உ/3638 | திரு. தம்பு சண்முகம் |
| 204 | யா/உ/3672 | திருமதி. சின்னம்மா கனகரத்தினம் |
| 205 | யா/உ/3690 | திருமதி. தவமலர் துரைராஜா |
| 206 | யா/உ/3704 | திருமதி. தங்கம்மா ஐயம்பிள்ளை |
| 207 | யா/உ/3710 | திரு. விசுவநாதக்குருக்கள் சிவசாமிக்குருக்கள் |
| 208 | யா/உ/3712 | திரு. தம்பிப்பிள்ளை சின்னத்துரை |
| 209 | யா/உ/3756 | திருமதி. மங்கயற்கரசி தேவதாசன் |
| 210 | யா/உ/3798 | திரு. வீரகத்தி சாந்தலிங்கம் |
| 211 | யா/உ/3810 | திரு. ஆறுமுகம் சோமசுந்தரம் |
| 212 | யா/உ/3827 | திரு. கணபதிப்பிள்ளை தருமலிங்கம் |
| 213 | யா/உ/3844 | திரு. பாலன் சுந்தரம் |
| 214 | யா/உ/3853 | திரு. வீரபாகு கந்தசாமி |
| 215 | யா/உ/3884 | திரு. அந்தோனி டேவில் |
| 216 | யா/உ/3922 | திரு. இளையதம்பி நவரத்தினம் |
| 217 | யா/உ/3924 | திருமதி. இராசம்மா இராசதுரை |
| 218 | யா/உ/3949 | திரு. வேலுப்பிள்ளை தம்பிஐயா |
| 219 | யா/உ/3963 | திரு. முத்தையா இராசரத்தினம் |
| 220 | யா/உ/4011 | திரு. பொன்னம்பலம் சிவலிங்கம் |
| 221 | யா/உ/4032 | திரு. சின்னத்தம்பி இராஜதுரை |
| 222 | யா/உ/4047 | திரு. சின்னத்தம்பி கந்தையா |
| 223 | யா/உ/4054 | செல்வி. உமா இராமநாதன் |
| 224 | யா/உ/4064 | திருமதி. அருந்ததிப்பிள்ளை இராசையா |
| 225 | யா/உ/4067 | திருமதி. மரகதவல்லி விசுவநாதன். |
| 226 | யா/உ/4080 | திரு. கந்தையா இராசலிங்கம் |
| 227 | யா/உ/4092 | திரு. வேலுப்பிள்ளை துரைசிங்கம் |
| 228 | யா/உ/4113 | திருமதி. குணலீலாவதி நடராசா |
| 229 | யா/உ/4115 | திரு. நாகமுத்து கந்தசாமி |
| 230 | யா/உ/4117 | திருமதி. புஸ்பமலர் வின்சன்ற் |
| 231 | யா/உ/4124 | திரு. சரவணமுத்து நடேசபாதஇருதயன் |
| 232 | யா/உ/4129 | திருமதி. செல்வரத்தினம் பஞ்சாட்சரம் |
| 233 | யா/உ/4163 | திரு. நடராசா சிவானந்தம் |
| 234 | யா/உ/4170 | திரு. செல்லப்பா இராமநாதன் |
| 235 | யா/உ/4194 | திருமதி. சின்னத்தங்கச்சி சிவகுரு |
| 236 | யா/உ/4206 | திருமதி. ஆச்சிமுத்து இராசதுரை |
| 237 | யா/உ/4216 | திரு. சின்னத்தம்பி கந்தசாமி |
| 238 | யா/உ/4230 | திருமதி. அன்னம்மா கந்தசாமி |
| 239 | யா/உ/4262 | திரு. முருகேஸ் கதிரவேற்பிள்ளை |
| 240 | யா/உ/4287 | திரு. சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 241 | யா/உ/4315 | திருமதி. சிவகாமிப்பிள்ளை பரராசசிங்கம் |
| 242 | யா/உ/4353 | திருமதி. பரமேஸ்வரி கனகரத்தினம் |
| 243 | யா/உ/4359 | திரு. மயிலு கணேசு |
| 244 | யா/உ/4361 | திரு. ஐயாத்துரைக்குருக்கள் பாலசுப்பிரமணியம் |
| 245 | யா/உ/4364 | திரு. வஸ்த்தியாம்பிள்ளை அல்பிறெட் |
| 246 | யா/உ/4373 | திரு. இராமசாமி சிவசுப்பிரமணியம் |
| 247 | யா/உ/4393 | திரு. செல்லர் தம்பியையா |
| 248 | யா/உ/4429 | திரு. முருகன் இராசலிங்கம் |
| 249 | யா/உ/4433 | திரு. சின்னத்தம்பி சிவராசா |
| 250 | யா/உ/4453 | திரு. பொன்னம்பலம் இரத்தினசிங்கம் |
| 251 | யா/உ/4457 | திருமதி. செல்வமணி லூசியாலியோ |
| 252 | யா/உ/4523 | திரு. சோமசேகரம் மகாதேவா |
| 253 | யா/உ/4533 | திரு. மார்க்கண்டு சண்முகம் |
| 254 | யா/உ/4563 | திரு. செல்லையா பத்மநாதன் |
| 255 | யா/உ/4601 | திரு. பரமானந்தி கயிலையங்கிரிநாதன் |
| 256 | யா/உ/4623 | திருமதி. நாகம்மா மாணிக்கவாசகர் |
| 257 | யா/உ/4624 | திருமதி. புஸ்பகாந்தி சிவலிங்கம் |
| 258 | யா/உ/4627 | திரு. கந்தையா விக்னராசா |
| 259 | யா/உ/4657 | செல்வி. ரஞ்சிதம் யோசுவா |
| 260 | யா/உ/4668 | திருமதி. தனலக்சுமி சுந்தரம் |
| 261 | யா/உ/4675 | திரு. சின்னையா கனகரத்தினம் |
| 262 | யா/உ/4684 | திருமதி. சிவக்கொழுந்து அருளம்பலம் |
| 263 | யா/உ/4715 | திருமதி. தங்கச்சியம்மா கதிரவேலு |
| 264 | யா/உ/4720 | திருமதி. சிவபாக்கியம் இராசரெத்தினம் |
| 265 | யா/உ/4756 | திருமதி. சங்கரப்பிள்ளை கயிலாயநாதன் |
| 266 | யா/உ/4778 | திரு. சின்னத்தம்பி சின்னராசா |
| 267 | யா/உ/4783 | திருமதி. பாக்கியம் மார்க்கண்டு |
| 268 | யா/உ/4792 | திருமதி. அன்னபூரணம் இராசையா |
| 269 | யா/உ/4831 | திரு. கந்தையா நவரத்தினம் |
| 270 | யா/உ/4835 | திருமதி. இரத்தினம் கந்தப்பு |
| 271 | யா/உ/4839 | திருமதி. தங்கராணி தம்பிராஜா |
| 272 | யா/உ/4849 | திருமதி. தங்கம்மா நல்லதம்பி |
| 273 | யா/உ/4856 | திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம் |
| 274 | யா/உ/4874 | திருமதி. அன்னப்பிள்ளை சுந்தரலிங்கம் |
| 275 | யா/உ/4898 | திருமதி. இராஜேஸ்வரி சந்திரசேகரம்பிள்ளை |
| 276 | யா/உ/4935 | திரு. முத்தையா சோமசுந்தரம் |
| 277 | யா/உ/4953 | திருமதி. இரத்தினம் கந்தசாமி |
| 278 | யா/உ/4954 | திருமதி. சரஸ்வதி மூத்ததம்பி |
| 279 | யா/உ/4962 | திரு. சிவசுப்பிரமணியம் மகாதேவன் |
| 280 | யா/உ/4963 | திரு. கந்தையா இரத்தினசிங்கம் |
| 281 | யா/உ/5048 | திரு. அப்புக்குட்டி புஸ்பராசா |
| 282 | யா/உ/5050 | திரு. கந்தர் துரைசிங்கம் |
| 283 | யா/உ/5057 | திரு. மாணிக்கம் நாகையா |
| 284 | யா/உ/5063 | திரு. இரத்தினம் பஞ்சலிங்கம். |
| 285 | யா/உ/5081 | திருமதி. சரஸ்வதி கணபதிப்பிள்ளை |
| 286 | யா/உ/5109 | திருமதி. பரமேஸ்வரி நவரத்தினம் |
| 287 | யா/உ/5132 | திரு. கதிரித்தம்பி நடராசா |
| 288 | யா/உ/5154 | திருமதி. இராசேஸ்வரி திருமேனி |
| 289 | யா/உ/5156 | திருமதி. சரோஜினிதேவி அப்புத்துரை |
| 290 | யா/உ/5160 | திரு. மயில்வாகனம் இராஜசுப்பிரமணியம் |
| 291 | யா/உ/5177 | திரு. செல்லப்பா மார்க்கண்டு |
| 292 | யா/உ/5197 | திருமதி. சிவபாக்கியம் பொன்னம்பலம் |
| 293 | யா/உ/5201 | திரு. துரையப்பா செல்வநாயகம் |
| 294 | யா/உ/5222 | திரு. சண்முகம் செல்லர் |
| 295 | யா/உ/5258 | திரு. செல்லத்துரை சீவரத்தினம் |
| 296 | யா/உ/5281 | திருமதி. யோகமலர் நாகலிங்கம் |
| 297 | யா/உ/5284 | திரு. சின்னப்பு பிலேந்திரன் |
| 298 | யா/உ/5293 | திருமதி. புஸ்பராணி தர்மரட்ணம் |
| 299 | யா/உ/5315 | திரு. காசிப்பிள்ளை சந்திரசேகரம் |
| 300 | யா/உ/5374 | திரு. யோசேப் திருஞானம் |
| 301 | யா/உ/5382 | திரு. செல்லர் சங்கரலிங்கம் |
| 302 | யா/உ/5383 | திரு. இளையதம்பி பிரகாசம் |
| 303 | யா/உ/5402 | திருமதி. பவளம் இராசரத்தினம் |
| 304 | யா/உ/5403 | திருமதி. கனகம்மா இராசதுரை |
| 305 | யா/உ/5409 | திருமதி. சுந்தரம் நடேசு |
| 306 | யா/உ/5410 | திரு. மௌனலிங்கம் முத்தையா |
| 307 | யா/உ/5425 | திருமதி. இராசமலர் தர்மராசா |
| 308 | யா/உ/5449 | திருமதி. பரமேஸ்வரி வைத்தீஸ்வரன் |
| 309 | யா/உ/5477 | திரு. அன்னதானம் தவப்பிரகாசம் |
| 310 | யா/உ/5503 | திருமதி. தங்கரத்தினம் கதிரவேலு |
| 311 | யா/உ/5504 | திருமதி. சிவக்கொழுந்து அருணாசலம் |
| 312 | யா/உ/5567 | திரு. கனகசேகரம் தெசராசசிங்கம் |
| 313 | யா/உ/5568 | திரு. ஆசிர்வாதம் றெயினோல் பீற்றர் அன்ரனி |
| 314 | யா/உ/5593 | திருமதி. நவரத்தினம் தில்லைநாதன் |
| 315 | யா/உ/5596 | திரு. நாகம்பிள்ளை பாலசிங்கம் |
| 316 | யா/உ/5606 | திருமதி. இராசம்மா குலத்திங்கம் |
| 317 | யா/உ/5620 | திரு. இராசையா சுப்பிரமணியம் |
| 318 | யா/உ/5625 | திருமதி. சின்னம்மா சின்னத்தம்பி |
| 319 | யா/உ/5659 | திரு. மாணிக்கம் கந்தசாமி |
| 320 | யா/உ/5663 | திரு. சோமசுந்தரம் நடேசப்பிள்ளை |
| 321 | யா/உ/5678 | திரு. சீனிவாசகம் பாலகிருஷ்ணன் |
| 322 | யா/உ/5683 | திருமதி. ஞானேஸ்வரி அப்புத்துரை |
| 323 | யா/உ/5691 | திருமதி. இராசாத்தி மொசெஸ் |
| 324 | யா/உ/5693 | திருமதி. மகேஸ்வரி ஞானசுந்தரம் |
| 325 | யா/உ/5716 | திரு. துரையப்பா ஞானசேகரம் |
| 326 | யா/உ/5726 | திருமதி. இராசம்மா முருகேசு |
| 327 | யா/உ/5749 | திரு. இளையதம்பி கந்தையா |
| 328 | யா/உ/5754 | திருமதி. தங்கரத்தினம் பொன்னையா |
| 329 | யா/உ/5775 | திரு. சின்னப்பு வேலாயுதம் |
| 330 | யா/உ/5778 | திருமதி. பொன்னம்மா தம்பிஐயா |
| 331 | யா/உ/5789 | திருமதி. சரஸ்வதி நாகரத்தினம் |
| 332 | யா/உ/5856 | திருமதி. சரஸ்வதி மார்க்கண்டு |
| 333 | யா/உ/5859 | திருமதி. சின்னம்மா சிவசம்பு |
| 334 | யா/உ/5876 | திருமதி. அன்னம்மா கந்தசாமி |
| 335 | யா/உ/5895 | திரு. கையிலாயர் சண்முகநாதன் |
| 336 | யா/உ/5900 | திருமதி. சிவபாக்கியம் நமசிவாயம் |
| 337 | யா/உ/5966 | திருமதி. பூரணம் கிருஸ்ணன் |
| 338 | யா/உ/5971 | திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை |
| 339 | யா/உ/5992 | திருமதி. கண்மணி சபாரத்தினம் |
| 340 | யா/உ/6006 | திருமதி. இராஜசுந்தரம் பாலசிங்கம் |
| 341 | யா/உ/6058 | திரு. கந்தையா பாலசிங்கம் |
| 342 | யா/உ/6075 | திரு. தம்பாப்பிள்ளை வையிரவநாதன் |
| 343 | யா/உ/6173 | திருமதி. அன்னலட்சுமி காசிநாதன் |
| 344 | யா/உ/6221 | திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம் |
| 345 | யா/உ/6228 | திரு. அருணாசலம் முருகையா |
| 346 | யா/உ/6259 | திருமதி. மனோன்மணி சிவபாதசுந்தரம் |
| 347 | யா/உ/6315 | திருமதி. சரஸ்வதி வயித்திலிங்கம் |
| 348 | யா/உ/6337 | திரு. சோமசுந்தரஐயர் பாலகிருஷ்ணசர்மா |
| 349 | யா/உ/6346 | திரு. சங்கரப்பிள்ளை யோகராசா |
| 350 | யா/உ/6389 | திருமதி. செல்வமலர் செல்வநாயகம் |
| 351 | யா/உ/6412 | திரு. மாணிக்கர் நடராசா |
| 352 | யா/உ/6438 | திருமதி. இரத்தனம் சற்குணம் |
| 353 | யா/உ/6446 | திரு. கணபதிப்பிள்ளை குமாரசாமி ஞானமித்திரன் |
| 354 | யா/உ/6449 | திரு. பிறின்ஸ் முத்துவேல் ஜெயரட்ணம் ரட்ணம் |
| 355 | யா/உ/6456 | திரு. சின்னையா இராசலிங்கம் |
| 356 | யா/உ/6457 | திருமதி. திலகவதி கனகநாயகம் |
| 357 | யா/உ/6517 | திருமதி. பாக்கியம் குமரையா |
| 358 | யா/உ/6555 | திருமதி. தங்கம்மா சின்னத்துரை |
| 359 | யா/உ/6569 | திருமதி. புவனேஸ்வரியம்மா விஜயரத்தினம் |
| 360 | யா/உ/6601 | திருமதி. கமலேஸ்வரி திருஞானசம்பந்தர் |
| 361 | யா/உ/6614 | திரு. செல்லையா சுப்பிரமணியம் |
| 362 | யா/உ/6618 | திரு. பொன்னையா மார்க்கண்டு |
| 363 | யா/உ/6638 | திரு. கதிரேசு சுப்பிரமணியம் |
| 364 | யா/உ/6644 | திரு. செல்லத்துரை இராசதுரை |
| 365 | யா/உ/6663 | திரு. யோசுவா மனோகரன் |
| 366 | யா/உ/6689 | திருமதி. பாக்கியம் இராஜசிங்கம் |
| 367 | யா/உ/6709 | திருமதி. சத்தியதேவி கிருபைரத்தினம் |
| 368 | யா/உ/6800 | திரு. நாகன் பொன்னுத்துரை |
| 369 | யா/உ/6807 | திருமதி. தங்கம்மா கனகசபை |
| 370 | யா/உ/6879 | திரு. வைத்திலிங்கம் அருளையா |
| 371 | யா/உ/6881 | திரு. சின்னப்பிள்ளை சுவாமிநாதன் |
| 372 | யா/உ/6892 | திருமதி. பார்வதி செல்லப்பா |
| 373 | யா/உ/6923 | திரு. வல்லிபுரம் சிவபாதம் |
| 374 | யா/உ/6950 | திரு. வர்ணகுலசிங்கம் ஜெகநாதன் |
| 375 | யா/உ/7019 | திருமதி. வள்ளிப்பிள்ளை வல்லிபுரம் |
| 376 | யா/உ/7029 | திரு. தம்பிப்பிள்ளை மாணிக்கவாசகர் |
| 377 | யா/உ/7030 | திரு. முருகேசு சின்னையா |
| 378 | யா/உ/7096 | திரு. ஐயம்பிள்ளை நவரத்தினம் |
| 379 | யா/உ/7100 | திருமதி. தெய்வானைப்பிள்ளை சண்முகநாதன் |
| 380 | யா/உ/7174 | திரு. முருகன் வைத்தியன் |
| 381 | யா/உ/7181 | திரு. நாகநாதர் வேலாயுதபிள்ளை |
| 382 | யா/உ/7207 | திருமதி. இராஜேஸ்வரி செல்வராசா |
| 383 | யா/உ/7237 | திருமதி. இராசம்மா மரியாம்பிள்ளை |

(முற்றும்)

# எம்.பி.பி.எஸ். பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு எம்.பி.பி.எஸ். பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு -

**முதல்தர சித்தி**

கே.ராஜசுதர்சன்

**இரண்டாம்தர சித்தி**

**மேல் பிரிவு**

ரி.அனோஜா, ரி.பாலமுருகன், எஸ்.பிறேமிளா, ஏ.சங்கீதா, ரி.தெய்வாம்பிகை, ஜி.யாழினி, எஸ்.திலகம்,

**இரண்டாம்தர சித்தி**

**கீழ் பிரிவு**

ரி.பாமினி, வி.பிரிந்தா, ஜே.ஜோர்ச் பிரான்சிஸ், எஸ்.ஜனாழினி, எஸ்.யசிந்தா, ரி.ஜெயந்தி, ரி.காண்டீபன், எம்.கீர்த்திகா, எஸ்.மதிவாணன், பி.நிறஞ்சினி, சி.நோறிஸ், ஆர்.ராஜவர்மன், ஆர்.ராம்பிரசாத், பி.சஜீவன், எஸ்.சசிகரன், எம்.சுதர்சனா, ஆர்.செந்திரு, ஜே.சிராந்தினி, எஸ்.சுதர்சினி, ரி.தர்மிளா, பி.திரிபுவனசுந்தரி, என்.உமா, எல்.வைதேகி, எஸ்.யாழினி, ஆர்.மாயவன், எம்.மஞ்சுதா, பி.மைதிலி, எம்.முகுந்தன், எஸ்.சசிகரன்.

**சாதாரண சித்தி**

ரி.பாலமுரளி, வி.பவாந்தன், ஆர்.சந்திரவதனி, ஜே.எப்.டாறியஸ் மாரியன், எஸ்.ஞானேஸ்குமார், ஆர்.காயத்திரி, எஸ்.கமலகுமார், கே.கதிர்காமநாதன், பி.கிரிதரன், பி.கிருஷாந்தன், கே.கோமகராஜா, எம்.லக்ஷ்மன், ஜே.லோட்ஸ் ஜஸ்மின், எஸ்.நளாயினி, ரி.நந்தகுமார், ஆர்.பிருந்தா, ரி.பிரமிளா, கே.ரூபதர்சினி, பி.சசிகலா, எஸ்.சயந்தன், பி.செந்தூரன், ஆர்.சாமிளா, வை.சிவாகரன், எஸ்.சிவனாதன், எஸ்.சிவகௌரி, எஸ்.சிறிகாந்தன், எஸ்.சிவரஞ்ஜனி, எஸ்.சிவசக்தி, எஸ்.சுஜாதா, பி.சுரேஸ், ஏ.சுசீலா, எஸ்.தயாநிதி, பி.ரி.றொனி சஞ்ஜீவ், கே.யாழினி, பி.ஆனந்தி, ஆர்.டினுசன், எஸ்.நிரஞ்சலா, பி.பரணீதரன், கே.செந்தூர்பதிராஜா, ரி.சுவேந்திரன், ரி.நிசாந்தன், ஏ.எல்.மொகமட் அனாஸ்.

(13)

# பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் போராட்டம் தொடர்கின்றது!



யாழ்ப்பாணம்

நிரந்தர நியமனம் வழங்கப்படாத பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் நேற்றும் மூன்றாவது நாளாக யாழ்.வலய கல்வி அலுவலகத்தின் பிரதான வாயிலை மூடி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றியும் இதுவரை நிய மனம் வழங்கப்படவில்லை என்றும் தமக்கு உரிய நீதி வழங்கப்படவேண் டும் எனக் கோரியே பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்த மறியல் போராட்டத்தால் யாழ். வலயக் கல்விப் பணிமனையின் செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டிருந்தன.

பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் தமது போராட்டம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், அரசாங்க அதிபர், மனித உரிமை ஆணைக்குழு, தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் மகஜர்களை தொலைநகல் மூலம் அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

# இராணுவத்தைக் கலைக்கும் திட்டம்; பிரதமர் விளக்கமளிக்க வேண்டும்!

## கோருகிறார் சரத்முனசிங்க

கொழும்பு

இராணுவத்தினர் மீது கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க - இராணுவத்தைக் கலைப்போம் என்று கூறியுள்ளார். இவரது இந்தக் கூற்றினை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்கின்றாரா? இராணுவத்தைக் கலைக்கும் திட்டம் அவரிடம் உள்ளதா? என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரட்நாயக்க, முன்னாள் இராணுவ அதிகாரிகளான லெப்டினன்ட் கேணல் சந்தன கருணாரட்ன, கேணல் ஜெயவீர பெர்னான்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து முனசிங்க மேலும் உரையாற்றுகையில் -

சோமவன்ச கூறியது பாரதூரமான விடயம். இராணுவத்தினர் குறித்து கருத்துக் கூறும் அதிகாரம் இவர்களுக்கு இல்லை. இவர்களின் இத்தகைய கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இராணுவ அதிகாரிகளைக் கொன்று குவித்துள்ள ஜே.வி.பியினர் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தனர். இராணுவத்திலிருந்துவிலக வேண்டுமெனவும் எச்சரித்திருந்தனர்.

இவ்வாறு செயற்பட்டவர்கள் இன்று இராணுவத்தைக் கலைக்கப் போவதாகக் கூறுகின்றனர். இராணுவத்தைக் கலைக்கப் போவதாக சோமவன்ச தெரிவித்துள்ள கருத்தை முன்னாள் இராணுவவீரர் என்ற வகையில் கண்டிக்கின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் இராணுவ பிரிகேட்கள் ஆறாக குறைக்கப்படும் என கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை. அரசியல் லாபத்திற்காக அவ்வாறான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் இராணுவம் பலப்படுத்தப்படும். இராணுவத்தில் காணப்படும் குறைகள் தீர்க்கப்பட்டு இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு உத்தியோக விலக்களிக்கப்படும்.

இராணுவத்தினருக்கு என தனியான அமைச்சு உருவாக்கப்பட்டு யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினரின் குடும்பங்களின் நலன்கள் கவனிக்கப்படும். மிலேனியம் சிற்றி விடயம் தொடர்பாக ஐ.தே.கட்சியின் மீது குற்றம் சாட்டுவது தவறானதாகும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் சகல ரட்நாயக்க கருத்து வெளியிடுகையில்-

1971ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டத்தை ஜே.வி.பியின் ரோகண விஜேவீர இராணுவத்தின் மீதான தாக்குதல்களுடன் தொடங்கினார். தங்களது கொள்கைகளுக்கு இராணுவம். தடங்கலாக இருப்பதாக குற்றம் சாட்டினார் ரோகண விஜேவீர.

1988 ஆம் ஆண்டிலும் அதே நிலையில் விஜேவீர இருந்தார். அப்போது இராணுவத்தை மட்டும் அவர் அழித்தொழிக்க விரும்பவில்லை. இராணுவத்தினரது குடும்பத்தையும் துரோகிகளாக முத்திரை குத்தி அழிக்க வேண்டும் என்று சூளுரைத்தவர். அதைத்தான் இப்போது சோமவன்சவும் கூறிவருகிறார்.

ரோகண விஜேவீரவின் கொள்கைகளைப் பரப்பும் வகையிலேயே நாட்டைப் பாதுகாக்காத இராணுவத்தை வீட்டுக்கு அனுப்பச் சொல்கிறார் சோமவன்ச. ஜே.வி.பி அணியினது ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ சோமவன்சவின் மிரட்டல் குறித்த தனது நிலைப்பட்டை விளக்க வேண்டும். சோமவன்சவின் எச்சரிக்கையை ஏற்றுக்கொள்கிறாரா மஹிந்த ராஜபக்ஷ என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# வீரவன்சவை கைதுசெய்யக் கோரும் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிவரை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் பணிப்பாளரான குமார் ரூபசிங்கவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த மனுவானது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியாளர்களான ஸ்ரீபவன் மற்றும் சிசிரலி ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

# நாரந்தனைக் கிணற்றில் சிசுவின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்

ஊர்காவற்துறை - நாரந்தனைப் பகுதியில் கிணறு ஒன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சிசுவின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை பொலிஸாருக்கு நேற்று கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் - பிறந்து ஓரிருதினங்களேயான மேற்படி சிசுவின் சடலத்தை மீட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி சிசு சுமார் 25 நாட்களுக்கு முன்னரே கிணற்றில் போடப்பட்டு இருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

# யாழ்.நகரப் பகுதி வீதிகளில் வெள்ளைவான் நடமாட்டம்!

யாழ்.நகரப்பகுதியிலுள்ள பிரதான வீதிகளில் இலக்கத்தகடுகள் அற்ற வெள்ளைநிற வாகனங்கள் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் நடமாடுவதை அவதானிக்க முடிகிறது.

நேற்றும் நேற்று முன்தினமும் பருத்தித்துறை வீதி ஊடாகவும், பலாலி வீதி ஊடாகவும் இலக்கத் தகடுகளற்ற வெள்ளை நிறவான்கள் பகல் வேளைகளில் நடமாடியதை அவதானிக்க முடிந்தது.

இந்த வாகனங்களில் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளில் இத்தகைய வாகனங்கள் ஈடுபட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

யாழ்.போக்குவரத்து பிரிவு பொலிஸார் அனைத்து வீதிகளிலும் திடீர் வாகன சோதனைகளை மேற்கொண்டு வருகின்றபோதிலும், இவ்வாறான இலக்கத்தகடற்ற வாகனங்கள் எதுவும் பிடிபடவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசாங்க வாகனங்களை

# பிரசாரத்துக்கு பயன்படுத்திய நபர்களுக்கு பிணை மறுப்பு!

கொழும்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் சுவரொட்டிகளை பெருந்தோட்டத்துறை அமைச்சின் வாகனத்தில் கொண்டுசென்றவர்களுக்கு பிணை வழங்க மாத்தறை நீதிமன்றம் மறுத்து விட்டது.

அரசாங்க சொத்துக்களை பொதுமக்கள் கைப்பற்றுவது என்பது பிணை வழங்கமுடியாத பெரும் குற்றம் என மாத்தறை பிரதம நீதிபதி றொஹான் ஜயவர்த்தன தெரிவித்தார்.

இந்தச் சுவரொட்டிகளை கொண்டு சென்ற சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 3 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது

கடந்த 10 ஆம் திகதி பெருந்தோட்டத்துறை அமைச்சின் வாகனத்தில் மகிந்தவின் 226 தேர்தல் சுவரொட்டிகளை எடுத்துச்சென்றபோது குருபெவிலே என்ற இடத்தில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக வெலிகம பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

# எழுச்சி மாநாட்டுஏற்பாட்டுக்குழு செயலகமருகே குண்டு வீச்சு!

வவுனியா

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய எழுச்சி பிரகடன நிகழ்வு ஏற்பாட்டு குழுவின் செயலகத்துக்கு அருகாமையில் நேற்று மாலை 4.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரண்டு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி அலுவலக வளாகத்தின் பின்புறத்தில் இந்தக் குண்டுவீழ்ந்து வெடித்தது. இந்த அலுவலகத்தையும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டு செயலணி செயலகத்தையும் ஒரு மதில் மட்டுமே பிரிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. சம்பவம் நடைபெற்ற இடத்தை வவுனியா நகர இராணுவத்தினரும் பொலிஸாரும் சென்று பார்வையிட்டனர்.

இது கைக்குண்டுத் தாக்குதல் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டு குழுவினரும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் சம்பவ இடத்தை பார்வையிட்டனர்.

இந்தச் சம்பவம் காரணமாக தாம் அதிர்ச்சி அடையவில்லை என்றும், தொடர்ந்தும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டு நிகழ்வு ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் செயலணிக் குழுத்தலைவர் எஸ்.என்.ஜீ.நாதன் தெரிவித்தார்.

(03)

# அம்பாறை மாவட்டத்தில் துணைப்படைப்பயிற்சி!

அம்பாறை

அம்பாறை மாவட்டத்தின் முதலாவது துணைப்படை - பயிற்சிகளை முடித்து நேற்று முன்தினம் வெளியேறியது. இதன்படி முதற்கட்ட பயிற்சியை முடித்த 84 பேரைக் கொண்ட துணைப்படை அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் சிறப்புற நடைபெற்றது.

எல்லைப் படைகளின் தளபதி வீரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் ராம், படையணித் தளபதி ஜனார்த்தனன் அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திறந்த பல்கலைக்கழகத்தின்

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை பெறுபேறுகள் வருமாறு

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா 2003/2004 இன் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு -

எஸ்.ஜோய் சனீஸ்ரன், எஸ். மதிவதனா, எஸ்.ரங்கநாதன், ஆர்.ராஜினி, ஏ.அனிந்தினி, எம்.அல்வினா, எம்.ஜமுனா, எஸ்.கிருபாகரன், எஸ்.விஜயகௌரி, கே.மாசிலன், ஏ.பௌனந்தி, என்.தயாழினி, எஸ்.சிறிசற்குணராஜா, எஸ்.மேரி பிரான்சிஸ்கா, எஸ்.சர்வேஸ்வரன், எஸ்.சிவாந்தி, ஆர்.சுகாஜனன், கே.வசந்தமலர், பி.யமுனா, பி.சுதேஸ்குமார், எஸ்.சந்திரசேகரம், ஏ.மதிவதனி, கே.ஜெகானந்தன், எஸ்.சோமநாதன், வி.தனேஸ்குமார், எஸ்.மதீஸ்வரன், எஸ்.உதயநாதன், எஸ்.சகுந்தலா, கே.கந்தவேள், ஜே.தெய்வரஜனி, எஸ்.கோணேஸ்வரன், ஐ.சித்திரா, ரி.நடனசபேசன், பி.குலேந்திரன், எம்.கிளாட்ஸ் நிர்மலா, ரி.சுஜாத்தா, ஆர்.ராஜகோபால், ஜி.ஜே.அமலதாஸ், எம்.ராசையா, எம்.கிருபாகரன், கே.யமுனா, எஸ்.நேமநாதன், என்.நிரைந்தினி, வி.கனகசிங்கம், ரி.சிவகுமார், எஸ்.யசோதரா, சி.சிவசுதன், எஸ்.ஏ. பொன்சியன், ஆர்.தனேஸ்குமார், ஏ.நவனீதகிருஷ்ணன், பி.பாலகிருஷ்ணன், ஏ.சுகந்தி, ஆர்.சந்திரதாஸ், எம்.ஜோதிலிங்கம், கே.சங்கர், எஸ்.தவநாயகம், வி.தர்மினி, வி.ரங்கநாதன், எஸ்.ஐ.மகேந்திர சர்மா, வி.நந்தகுமார், ரி.சிவசக்தி, ரி.கந்தையா, பி.சுப்பிரமணியசிவம், எம்.குகபரன், எஸ்.சுதர்சன், ஆர்.வானதி, பி.உமா, ரி.சிறிசெல்வம், என்.ஜெயவாணி, ரி.குலேந்திரகுமார், கே.தாரணி, எம்.அகிலா, ரி.சிவசுதானி, எஸ்.றொமேஸ், வி.வேல்முருகன், பி.பேர்ள் றஞ்சினி, ஆர்.ராமநாதன், எஸ்.நவரத்தினம், கே.சிவரஞ்சினி, எஸ்.சிவகுமார், ஏ.றொபேட், ரி.சர்வேஸ்வரன், எஸ்.கல்பனா, ஆர்.ராஜராஜன், எஸ்.தர்சினி, ஆர்.சாந்தி, எம்.சிவனேஸ்வரி, ஆர்.செல்வமதி, ஏ.அருளம்பலம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் பகுதிகளில் தேர்தல்; தவிர்க்கக் கோரி மனு தாக்கல்!

கொழும்பு —

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதை தவிர்க்கக் கோரி, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் நெல்சன் பெரேரா அடிப்படை மனித உரிமை வழக்கை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளில் நீதியானதும், நியாயமானதுமான தேர்தல் நடைபெறாது என்பதால் அங்கு தேர்தலை நடத்தக்கூடாது. அங்கு தேர்தல் நடத்தப்பட்டால் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்கைச் செலுத்த முடியாத நிலைமை ஏற்படும் என்று அந்த மனுவில் நெல்சன் பெரேரா தெரிவித்துள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையாளரை பிரதிவாதியாக இந்த மனுவில் நெல்சன் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்குக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு பகுதி மக்கள் வாக்களிப்பதைத் தடுக்கும் சட்டரீதியான செயற்பாடுகள் மூலம் அவர்கள் வேறு ஒரு அரச பகுதியில் இருப்பதாக உணரக்கூடும் என முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இது பற்றிக்கூறும்போது-

வாக்களிக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதன் மூலம் அவர்களாகவே தனியரசுக்கான அங்கீகாரத்தை நியாயப்படுத்துகிறார்கள் எனக்குறிப்பிட்டார்.

## சவால்களை எதிர்கொள்ளும் படைத் தளபதிகளே தேவை!

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு —

எந்தச் சவாலையும் எதிர்கொள்ளக் கூடிய இராணுவ அதிகாரிகளே இப்போது நாட்டுக்குத் தேவையாக இருப்பதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கொத்தலாவெல இராணுவ அக்கடமியின் 25 ஆம் ஆண்டு விழா நிறைவு மற்றும் 15 ஆவது பட்டமளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றபோது அதில் பங்கேற்றுப் பேசிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்ததாவது -

கொத்தலாவல இராணுவ அக்கடமி கடந்த காலங்களில் உருவாக்கிய திறமையான இராணுவ அதிகாரிகள் எந்தச் சவாலையும் எதிர் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். அதேபோல் திறமையுள்ள - எந்தச் சவாலையும் எதிர்கொள்கின்ற இராணுவத் தளபதிகளே நாட்டுக்கு இப்போது தேவை.

இந்தப் பயிற்சிக் கல்லூரியில் உயர் கற்கைகளை மேற்கொள்வதில் மூத்த மற்றும் இடைநிலை அதிகாரிகள் ஆர்வம்காட்டி வருகின்றனர். இந்தப் பயிற்சிக் கல்லூரியானது அறிவுசார் துறையில் நாட்டின் பாதுகாப்பின் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் வகையிலான ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறது.

கடந்த 25 ஆண்டுகாலமாக நாட்டில் இராணுவக் கல்வியை அளிப்பதில் இந்தப் பயிற்சிக் கல்லூரி பாரிய பங் காற்றிவருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## நெல்சன் பெரேராவின் மனுவை நிராகரிக்கக் கோரியும் வழக்கு!

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வாக்குச்சாவடிகள் அமைத்து வாக்குப்பதிவு நடத்துவதைத் தடைசெய்யுமாறு கோரி தேசிய முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நெல்சன் பெரேரா தாக்கல் செய்த மனுவை நிராகரிக்குமாறும் மாற்றுக் கொள்கைக்கான நிலையம் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளது.

முற்போக்கு முன்னணி வேட்பாளரின் மனு விசாரிக்கப்படும் வேளையில் - தகவல்களைச் சமர்ப்பிக்க அனுமதி வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று இடையீட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

பெரேராவின் மனுவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாக்கம் ஏற்படுகிறது என்று கருதி இந்த விவகாரத்தில் தாமும் தலையிடத் தீர்மானித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## வன்னி மாவட்ட எம்.பிக்கள் பொலிஸ் அதிகாரியுடன் சந்திப்பு

வவுனியா —

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் - வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவின் பிரதிநிதிகளும் நேற்று வவுனியா மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேசிங்க பண்டாவைச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பில் இன்று நடைபெறும் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு தொடர்பாக பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

வன்னிப் பகுதியில் இருந்தும் பெருமளவு பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவிருப்பதாகவும், சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

## கடற்படைச் சிப்பாய் திருமலையில் தற்கொலை

திருகோணமலை —

திருகோணமலை விளாங்குளம் கடற்படை முகாமுக்கு நீர் விநியோகம்செய்யும் நிலையம் ஒன்றில் வைத்து - கடற்படைச் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.35 மணியளவில் இவர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக சீனன்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

நாவல பிரதேசத்தைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாயே தற்கொலை செய்துகொண்டவராவார். இதற்கான காரணம் இதுவரை கண்டறிப்படவில்லை எனவும் இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரி வித்தனர்.

## கனடாவில் இரு தமிழ் சகோதரர்களை காரால் மோதிக் கொலை செய்த இளைஞர் அமெரிக்காவில் கைது!

ரொறன்ரோ —

கனடாவில் கடந்தசெப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி இரண்டு இலங்கைத் தமிழ் சகோதரர்களான நகுலசிகாமணி சந்திரசேகர், நகுலசிகாமணி சௌமியன் ஆகியோரைக் காரால் மோதிக் கொலை செய்த சூத்திரதாரி அமெரிக்காவில் கைது செய்யப்பட்டார்.

போல் ஜெயராஜ் அலெக்ஸாண்டர் (வயது 21) என்பவரே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலை களுடன் சம்பந்தப்பட்டார் எனத் தெரிவித்து கடந்த 20 ஆம் திகதி மேற்படி நபரைக் கைது செய்வதற்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. எனினும், கனடாவில் ரொறன்ரோ நகரை வசிப்பிடமாகக் கொண்ட இவர் இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்றார்.

இதனையடுத்து இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட இவரைக் கைது செய்வதற்காக மூன்று குழுக்களைப் பொலிஸ் நியமித்து விசாரணைகளை மேற்கொண்டு வந்தது. இந்த நிலையிலேயே அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்ற அலெக்ஸாண்டர் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவின் நியூ கவன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட இவரை கனடாவுக்கு நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் கண்காணிப்புக்கு ஐரோப்பிய ஒன்றியக் குழு!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணிக்கென ஐரோப்பிய ஒன்றியம் பார்வையாளர்களை அனுப்புவதாக அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் வேண்டுகோள்ளை ஏற்று ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் ஜோன் குஸ்னகன் தலைமையில் இந்தக் குழுவினர் இலங்கைக்கு வரவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரப் பிரிவு அதிகாரி வாலட்னா வெளியிட்ட செய்திக் குறிப்பில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை உறுப்பு நாடு என்ற அடிப்படையிலும், இனப் பிரச்சினை மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீளமைப்புப் பணிகளில் பாரிய பங்காற்றிவரும் நாடு என்ற அடிப்படையிலும், அந்நாட்டின் ஜனநாயக நிலைத் தன்மைக்கு உதவ இந்தக் குழுவை ஐரோப்பிய ஒன்றியம் அனுப்புவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 17 ஆம் திகதி தேர்தல் முடிந்தவுடன் தேர்தல் தொடர்பான உடனடி அறிக்கையை இந்தக் குழு வெளியிடும். அதன் பின்னர் தேர்தல் குறித்த முழுமையான விடயங்களை உள்ளடக்கிய விரிவான அறிக்கையும், பரிந்துரைகளும் வெளியிடப்படும் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தபால் மூல வாக்களிப்புக்கான 1000 விண்ணப்பங்கள் தாமதம்!

### தேர்தல் திணைக்களம் முறைப்பாடு

அரசாங்க மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய ஆறு நிறுவனங்களின் ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்பதற்கான சுமார் 1000 விண்ணப்பப்படிவங்கள் அந்த நிறுவனத் தலைவர்களினால் வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் கையளிக்கப்படவில்லை என்று தேர்தல் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் கடந்த 10 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. காலக்கெடு முடிவடைந்த பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று தேர்தல் திணைக்களம் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களுக்கும் அறிவித்திருந்தது.

தற்போது ஆறு நிறுவனத் தலைவர்கள் விண்ணப்பங்களை தாமதித்து அனுப்பியுள்ளதால் சுமார் ஆயிரம் பேருக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போகும் என்று தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

### புலிகளின்...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் சீர்குலையும் நிலையில் இந்த எரிபொருளைக் கொண்டு இலகுரக விமானங்களை விடுதலைப் புலிகள் இயக்கக்கூடும் என்றும் அந்தப் பத்திரிகை அச்சம் தெரிவித்துள்ளது.

### மாமனாரின்...

மகன், யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்துறை பொலிஸார் மாமனாரைக் கைதுசெய்து ஊர்காவற்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### ஞானக்கோனை...

ஒரு அறிக்கையை விரைவில் சமர்ப்பிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமரின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள எம்.சகாயதேவன், ரி.ஆரோக்கியநாதன் சிவராஜா சிவரஞ்சன் மற்றும் காளிமுத்து திருக்குமார் ஆகியோரை தடுப்புக் காவலில் வைத்து விசாரித்துவருவதாகவும் குற்றப்புலனாய்வுத்துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐயர் ராஜ்குமார், தமிழினியன், ரெங்கன் ஜனகன் ஆகியோரின் விளக்கமறியலை நீடிக்குமாறு விடுத்த வேண்டுகோளுக்கமைய அவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## வாகரையில் தாக்குதல்; போராளி வீரச்சாவு!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரைப் பிரதேசத்தில் நேற்றுக் காலை 7.15 மணியளவில் ஆயுதக் குழுவொன்றினால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

கட்டுமுறிவுக்குளத்திற்கு அருகாமையில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த போராளிகள் மீதே இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுவினர் இந்த தாக்குதலை நடத்தினர்.

மட்டக்களப்பு - பொலனறுவை மாவட்ட எல்லைப் பிரதேசமான இந்தப் பகுதியில் தாக்குதலை நடத்தியோர் அருகிலுள்ள இராணுவ முகாமை நோக்கி தப்பிச் செற்றதாகக் கூறப்படுகிறது.

## புலிகளுடனான சந்திப்பே....

கையளித்துவிட்டுத் திரும்புகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் சுமார் 2.30 மணிநேரம் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன. தமிழர் தரப்பில் 10 பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமிழர் தரப்பு நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம்.

விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் பயணத்தடை விதிக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உத்தியோகபூர்வ சந்திப்புக்களை மட்டும் மறுஅறிவித்தல் வரை தவிர்த்துக் கொள்வதாக தெரிவித்தனரே தவிர, அவர்கள் எந்தவொரு பயணத்தடையையும் விதிக்கவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளால் இந்தச் சந்திப்பில் எடுத்துக்கூறப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமென்றும் இலங்கை சமாதான முயற்சிகளில் தாம் அக்கறைகொண்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர்.

சந்திப்புக்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தவிர்ப்பதானது - சமாதானப் பேச்சுக்களில் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளில் சமநிலைத் தன்மையைப் பாதிக்கும். சமாதானப் பேச்சுக்களையும் பாதிப்பதுடன் அரச இனவாதிகளுக்கு பலம் சேர்ப்பதாக அமையும்.

எதிர்காலத்தில் இப்படியான நகர்வுகள் இருக்கக்கூடாது என்பதும் தமிழர்தரப்பால் முன்வைக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளுடன் இணைந்து....

டங்களில் படையினர் காவலுக்கு நின்றிருந்தனர்.

திருகோணமலை நகருக்கு வருவதற்கு முன்னதாக மகிந்த ராஜபக்ஷ கிண்ணியாவில் பிரசாரக்கூட்டம் ஒன்றினையும் நடத்தியிருந்தார்.

திருகோணமல்லை மெக்கெய்சர் விளையாட்டரங்கில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில் -

திருகோணமலை மாவட்டம் மூவின மக்களையும் சார்ந்த ஒரு மாவட்டமாகும். இது தனிஒரு இனத்திற்கு மாத்திரம் உரியதல்ல. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை என்னால் மாத்திரமே தீர்க்க முடியும்.

ரணில் விக்கிரமசிங்காவால் முடியாது. அவர் விடுதலைப்புலிகளுடன் இணைந்து இந்த நாட்டினைத் துண்டாட முனைகிறார்.

விடுதலைப்புலிகளுடன் நான் பேச்சுவார்த்தை மேற்கொண்டு இந்த நாட்டில் அமைதி ஏற்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்வேன். விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரமான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது நடவடிக்கைகள் காரணமாக ஐரோப்பிய நாடுகள் அவர்களைத் தடைசெய்யும் நிலைக்கு வந்துள்ளன.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் காரணமாக எமது நாடு சின்னாபின்னமடைந்துள்ளது. இவற்றினை நீக்கவேண்டிய பொறுப்பு எங்களைச் சார்ந்தது. திருகோணமலை முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசமாகும். அங்கு கடந்த சில நாட்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கொடி ஏற்றப்பட்டுள்ளது. இதை அனுமதிக்க முடியாது எனவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.